ஓம்.

"ஹம்பக்"

ஒரு

தமிழ் "ஸோஷல்" நாடகம்.

"ஸ்ரீ இராமாநுஜாசாரியர்", "ஸ்ரீ சங்கராசாரியர்", "ஸ்ரீ விப்ர நாராயணர்", "திருஞான சம்பந்தர்", "ஸ்ரீ நாரதர்", "நளன்", "ஸ்ரீ பக்த பரதன், அல்லது, ஸ்ரீ பாதுகா பட்டாபிஷேகம்", "வம்புக்கொடுமை" "மாதவி", "வெகுமதி",

முதலிய தமிழ் நாடகங்களின் ஆசிரியராகிய

S. K. பார்த்தஸாரதி, B. A., B. L.,

(டிஸ்டிரிக்ட் முன்ஸிப்)

இயற்றியது.

முதற் பதிப்பு

ஏப்ரில், 1935.

உரிமைகள் அனைத்தும் ஆசிரியர்க்கே.

FIRST EDITION:-

APRIL 1935.

34699

PRINTED

AT THE

BHARATI PRESS,
MANNARGUDI.

O,2:1116

Dedicated

to

SRI KRISHNA

and

Inscribed

to the cherished memory

of

My Late Beloved Father

Sriman S. Krishnamachariar, B. A.,

A True Baktha.

PREFACE.

"**Humbug**"! How truly this word depicts most of us! Very rarely we could find a man or woman sincerely true and pure, in thought word and deed. We attribute to ourselves virtues we do not possess, pretend to be what we are really not, and, thanks to the rules and conventions of "Society", grin and keep quiet when others, with equal insincerity, praise us for qualities we do not have, or, at the most, we only raise a mild protest, simply to invoke greater showers of encomiums. This imposture is greatest in the region of Religion, where certainly it ought not to be. We often pretend to worship in Temples (Churches, or Mosques), when our minds and hearts wander elsewhere, or else we simply pray for promotion, birth of a child, and so forth; we pretend to mutter manthrams, (or hymns) and go through ceremonials, the meaning and siginificance of which we do not even try to enquire, and in what we do we have not any the slightest faith. This hypocrisy is to be met with in all spheres of life — private life, social life, professional life, and public life — for, it is generally believed that, (at least in the last two), "to be *successful*, one must be a hypocrite, a humbug, and a liar".

I am disgusted with this life of a HUMBUG, and often cry out to God for our liberation from such a life, and for our becoming true and pure, in thought word and deed; and, in one of such moments, (with some ideas gleaned from Moliere's '*Tartuffe*') I planned this drama, which was completed with the valuable suggestions of some of my good friends (especially M. R. Ry. S. Vaidyanatha Ayyar Avl., B. A., L. T., Headmaster, National High School, Mannargudi, and M. R. Ry. K. Rangachari, Avl., Supervisor, P. W. D. Pattukottai), and the kindness of a sweet amanuensis, my gratitude to all of whom cannot be adequately expressed.

I send this forth into the world with the hope that like me, others may, (while at least reading it, or seeing it enacted), introspect, find out the details of imposture in their lives, weed them out, and sincerely try their best to live a life of Truth, for there is no Religion higher than TRUTH (Sathyân nâsthi parô Dharma:). May Lord Sri Krishna bless those who strive for this real conversion to the life of TRUTH!!!

KOILPATTI,
April, 1935.

S. K. PARTHASARATHI.

MUMBUG.

Scenes			Screens	Fittings and Furniture	Articles	Persons: Nos. as in page 7.
S. No.	Act & Sc					
1	I	i.	Pooja Mantapam	Sri Krishna's Image; a seat.	Pooja materials, and offerings; Bajana materials.	1 to 3, 7 to 10 13 & 16.
2		ii.	Garden path.	A garden back-bench.	Nil.	5, 6 & 4.
3		iii.	Hall.	A sopha; a tea-poy.	2 cups of coffee.	2, 3, 1, 5 & 4.
4	II	i.	Street.	Nil.	2 Bi-cycles; a stethoscope.	8, 9, 10, 7, 4 & 11.
5		ii.	Garden front	Garden back-bench.	A printed page, with a bust portraiture; a sheet of paper, with a bust drawn in pencil.	4, 5, 6, 3, 1 & 2.
6		iii.	Street.	Nil.	Bajana materials; a Thamboor; a Chappalâ-kattai; a copper chembu, with coins; a cloth bag, with rice; rice offerings, and coins; a brown cover, with a paper in it.	1, 7 to 11, 14 & 16.
7	III	i.	Bed-room.	A cot; 2 chairs.	A motor-horn; a printed page, with a figure; hand-cuffs; 2 garlands.	3, 4, 1, 2, 6, 12 & 15.

நாடக பாத்திரங்கள்.

1. கிருஷ்ணாநந்த யோகி (35 வயது) ஒரு பக்த யோகி ('ஹம்பக்')
2. ரகுநாதய்யங்கார் (50 வயது) ஒரு அட்வோகேட் (பக்தர்; ஏமாந்தவர்)
3. கோதையம்மாள் (22 வயது) ரகுநாதய்யங்காரின் 2-ம் மனைவி.
4. பதுமநாபன் (25 வயது) அவர் மூத்த மனைவியின் மகன்; டாக்டர்.
5. கமலம் (18 வயது) அவர் மூத்த மனைவியின் மகள், இன்டர்மீடியேட் வகுப்பில் படிக்கிறவள்.
6. அனந்தய்யங்கார் (27 வயது) ஒரு அட்வொகேட் (பாரிஸ்டர்), கமலத்தின் காதலன்.
7. கல்யாணராம சாஸ்திரியார் (30 வயது) போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர்; வெளிவேஷ பக்தன்.
8. கோவிந்தாசாரியார் ஸ்வாமி (40 வயது)
9. சிவராம கனபாடிகள் (45 வயது)
10. ராமகிருஷ்ண தாஸரி (சாத்தானி) (48வயது)

(8–10: வெளிவேஷ பக்தர்கள்.)

11. மனத்துணை நாயக்கர் (42வயது) ஒரு "சுயமரியாதை"க்காரர்
12. துரை ராஜ அய்யர் (38 வயது) போலீஸ் ஸர்கில் இன்ஸ்பெக்டர்.
13. ரங்கன் (16 வயது) ரகுநாதய்யங்கார் சமயற்காரன்.

14, 15. கான்ஸ்டபில்கள் (1 & 2.)

16. பக்தஜனங்கள் & ஊரார்கள்.

இடம்: பக்தபுரி.

அறிவிப்பு.

என்னால் இயற்றப்பட்ட நாடகங்களை, முழுதாகவோ, சில பாகமாகவோ, நடிக்க விரும்புவோர், முன்னதாகவே, ஒவ்வொரு தடவையும், நான் கேட்கும் (Royalty) ராயல்டி கட்டணத்தை எனக்கு மணியார்டர் செய்து, என் அனுமதி பெற்று, பிறகுதான் நடிக்கவேண்டும். தவறினால், என்னுடைய (Copy-right) காபி-ரைட் பாத்தியங்களி லொன்றை மீறின குற்றம் செய்தவர்களாய், ஸிவில் கிரிமினல் கோர்ட்டுகளில் நடவடிக்கைகளுக்கு உள்ளாவார்கள்.

S. K. பார்த்தஸாரதி.

ஓம்.

ஹம்பக்.

அங்கம் 1.

காட்சி 1.

[ரகுநாதய்யங்கார் பங்களாவில் பூஜா மண்டபம்—ஒரு சனிக்கிழமை இரவு, 8 மணி—பூஜா மண்டபத்தில் ஸ்ரீகிருஷ்ண விக்ரஹம் அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கிறது. தூப தீபாதி நைவேத்தியங்கள் முன்னால் வைக்கப்பட்டிருக்கின்றன. பூஜா மண்டபத்திற்கு முன்னால், *வலது புறத்தில், (ஜடை, மீசை, தாடி வளர்த்திருக்கும்) கிருஷ்ணாநந்த யோகியார், இடது புறம் நோக்கி, ஒரு பீடத்தின் மீது உட்கார்ந்திருக்கிறார். அவருக்கு எதிரில், வலது புறம் நோக்கி, ரகுநாதய்யங்கார், கல்யாணராம சாஸ்திரியார், கோவிந்தாசாரியார், சிவராம கனபாடிகள், ராமகிருஷ்ண தாஸரி, இன்னும் சிலர், கை கூப்பி நிற்கிறார்கள். யோகியின் பின்புறம், இடது புறம் நோக்கி, கோதையம்மாளும், ரங்கனும் கை கூப்பி நிற்கிறார்கள். யோகிகள், பூஜை முடித்து,

S. அருச்சனை செய்து, ஆலத்தி யெடுக்கிறார். பிறகு, யோகியவர்கள் கையால் ஜாடை செய்ய, எல்லோரும் உட்காருகிறார்கள்.]

யோகி:—ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் அருள் உங்கள் எல்லோருக்கும் பூரணமாய் இருக்க வேண்டுமென்று அவரைத் தியானித்து, அவருடைய கருவியாக, அடியேன் சில வார்த்தைகளைச் சொல்லுகின்றேன். இந்தக் கலி யுகத்தில்

* 'வலதுபுறம்' 'இடதுபுறம்' என்பன நடிகர் மேடையில் சபையோரை நோக்கி யிருக்கும் போது உள்ளன.

பகவானைச் சுலபமாக அடையும் மார்க்கம் பக்தியே.
"பக்தி" என்ற வார்த்தையி னுடைய மூலத்தின் பொருள்
பஜித்தல் என் றிருப்பதால், பக்தியின் முக்கிய சாதனம்
பஜனை செய்தல். ஸ்ரீராம நாமத்தை பஜனை செய்துகொண்டே
யிருந்ததால், பஜன ரூபமாகத் தனது பக்தியை வெளியிட்ட
ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளுக்கு ஸ்ரீ ராமபிரான் ப்ரத்யக்ஷ
மானார் என்று உங்களுக்குத் தெரிந்ததே. அதனால், பஜனை
செய்தலின் மேன்மையை அவர் அடிக்கடி வெகு விசேஷித்
S. துப் பாடி யிருக்கிறார். இவ் விதம் பஜனை செய்வதில் மிகவும்
ப்ரேமையோடு இருக்கவேண்டும். ஸ்ரீ நாரத பகவான், அவ
ருடைய பக்தி ஸூத்திரத்தில், 'பக்தி ப்ரேம ரூபா:', அதாவது
'பக்தி ப்ரேமையின் ஸ்வரூபமானது' என்று கூறியிருக்கிறார்.
ஸ்ரீ ராமபிரானைக் காட்டிலும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா பக்தர்
களுக்குத் தானே ஈடுபட்டு அவர்களுக்கு மிகவும் சுலபராகி
யிருந்ததால், (தனது இடதுபுறம் திரும்பி ஸ்ரீ கிருஷ்ண விக்ர
ஹத்திற்குக் கை கூப்பிவிட்டுத் திரும்பி), இந்த கிருஷ்ண
மூர்த்தியின் ஸந்நிதானத்தில் அவரை மிகவும் ஆதுரத்துடனும்
ஸந்தோஷத்துடனும் பஜிக்கலாம். அப்படிச் செய்யும்போது,
அவருடைய மந்தஹாஸ வதனத்தை மனதிற் கொண்டு,
அவர் நம்மோடு கலந்திருப்பதாக மனதில் நினைத்து, நம்மை
கோபிகளாக பாவித்து, கோபிகளோடு அவர் செய்த லீலை
களை நாம் அவருடன் செய்வதாக நினைத்து, அந்த க்ரீடை
களைச் செய்து, ஆனந்திக்க வேண்டும். அவ்வித க்ரீடைகளில்
முக்கிய மானது ராஸக்ரீடை. அதனுடைய விசேஷத்தைப்
பற்றி கூறுவ தென்பது இயலாது; அதை அனுபவித்தே
அறிய வேண்டும். யோக சாஸ்திரத்தின் உண்மையை அறிந்த
வர்களுக்கே ராஸக்ரீடையின் தத்வம் ஒருவாறு புலப்படும்.
"அங்கண் மா ஞாலம் படைத்தேன் நான் என்னும்",
என்றது முதலான வாக்கியங்களை நாயகி பாவத்தில் ஆழ்வார்
வெளியிட்டபடி, பகவா னிடத்தில் ஐக்கிய புத்தி யடைந்து
லயித்து பஜித்தலே ராஸக்ரீடையின் முக்கிய அம்சம். அவ்
S. விதம் பஜித்தலில், பகவானுடைய நாம ஸங்கீர்த்தனத்தால்,
அவருடைய நாமங்க ளாகிய புஷ்ப தளங்களைக் கொண்டு,
அவரைப் பூஜிப்பதுதான் மானிட ஜன்மம் எடுத்தது ஸபல

S. மாகும் வித மாகும். ஸ்ரீ கிருஷ்ண பகவானை நமது ஹ்ருதய கமல மாகிய பீடத்தில் வந்திருக்கும்படி வேண்டி, அவர் அங்கு தங்கி யிருப்பதாக பாவித்து, அவருக்கு மானஸிகமாக ஸ்நான பானாதிகள், வஸ்திர ஹார கந்த ஆபரண முதலானவை களால் அலங்கரித்தல் செய்வதாக பாவித்து, முடியு மானால் அவருடைய திவ்ய மங்கள விக்ரஹத்திற்கு மேற் கூறிய வற்றை யெல்லாம் செய்து, பக்ஷ்ய போஜ்ஜியங்களை நிவேதனம் செய்து, கற்பூர ஹாரத்தி முதலானவைகள் ஸமர்ப்பித்து, மந்த்ர புஷ்பங்களினால் அருச்சனை யிட்டு, புள காங்கிதத்தோடு கூடிய ஆனந்தத் துடன், தாபத்ரயாதிகளை நீக்கிக் கொண்டு, வெகு சுலபமாக முக்தியை யடையலாம். இப்பொழுது கூறியபடி நாம் எல்லோரும் சேர்ந்து ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை பஜிப்போ மாக.—

(எழுந்திருக்கிறார்; மற்றெல்லோரும் கூட எழுகிறார்கள்)

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் பிரதிநிதியாய், அவருடைய கருவியாய், அடியேன் இருக்க, தாங்கள் எல்லோரும் கோபிகளாக பாவித்துக் கொள்ள, நாம் எல்லோரும் சேர்ந்து பஜனை செய்வோம்.—

[யோகிகள் முன்வந்து நடுவில் நிற்க, மற்றெல்லோரும் அவரைச் சுற்றி நிற்கிறார்கள். யோகிகள், தாளம் போட்டுக்
S. கொண்டு, சில நாமாவளிகளை வரிவரியாய்ச் சொல்ல, மற்ற வர்கள் வரிவரியாய்ப் பின்பற்றிப் பாடி, தாளம் போட்டுக் கொண்டு, அவரைச் சுற்றிச் சுற்றி வருகிறார்கள்.]

யோகி:—ஸ்ரீ கிருஷ்ண பகவான் கோபிகளுடன் லீலைகள் புரியும் போது மத்தாடுவதும் ஈட்டியாடுவதும் உண்டு. அவ்விதமே நாமும் செய்தல் அவரை பஜிக்கும் முறையாகும்.

[ஒவ்வொருவராக யோகிகளுடனும், சிலர் இருவரிருவ ராகச் சேர்ந்தும், அல்லது நால்வராகச் சேர்ந்தும், ஈட்டி மத்து முதலானவை ஆடுகிறார்கள். அவ்விதம் செய்து
S. கொண்டே எல்லோரும் நாமாவளிகள் சொல்லுகிறார்கள். பிறகு, எல்லோரும் பிரிந்து யோகியைச் சுற்றி நிற்கிறார்கள்.]

யோகி:— கிருஷ்ணா ராம் ராம் கோவிந்த ஹரி ஹரி!
S. கிருஷ்ணா ராம் ராம் கோவிந்த மாதவ!
கிருஷ்ணா ராம் ராம் கோவிந்த கேசவ!
விஷ்ணு ஸதாநந்த வேணுகோபால பால!

[என்ற நாமாவளியை வரிவரியாய்ச் சொல்லித் தாளம் போட்டுப் பாட, மற்றெல்லோரும் தாளம் போட்டுப் பாடி அவரைச் சுற்றி வருகிறார்கள்].

யோகி:—கோபிகா ஜீவன ஸ்மரணம்!

எல்லோரும்:—கோவிந்தா! கோவிந்தா!!

யோகி:—எல்லோரும் அமருங்கள்; தீர்த்த ப்ரசாதங்கள் பெற்றுக் கொள்ளுங்கள். (தனது ஆசனத்தில் உட்காருகிறார்.)

[ரகுநாதய்யங்கார் முதலியவர்கள் ஒவ்வொருவராய் யோகிகளிடம் வந்து தீர்த்தம் புஷ்பம் முதலியன பெற்றுக் கொண்டு போய் உட்கார்ந்துகொள்ள, ரங்கன் எல்லோர்க்கும் சுண்டல் முதலிய ப்ரசாதங்கள் கொடுக்கிறான்; எல்லோரும் உட்கொள்ளுகிறார்கள். பிறகு, யோகியும் மற்றெல்லோரும் எழுந்திருந்து கை கூப்பி நிற்கிறார்கள். யோகிகள் கற்பூர ஆலத்தி செய்ய, எல்லோரும் சேர்ந்து ஸ்ரீ கிருஷ்ண பிரானுக்கு
S. மங்களம் பாடுகிறார்கள்.]

அங்கம் 1.

காட்சி 2.

[ரகுநாதய்யங்கார் பங்களாவின் தோட்டத்தில் ஒரு பாதை.— அதில், வலது புறத்தில், ஒரு (Garden Back Bench) சாய்வு பெஞ்சு இருக்கிறது.— முன் காட்சிக்கு அடுத்த வியாழக்கிழமை மாலை.— கமலம் பெஞ்சில் உட்கார்ந்து கொண்டு யோசித்த வண்ணம் இருக்கிறாள். அவள் நவீன ரீதியில் ஆடையும் ரவிக்கை முதலானவைகளும் தரித்து, அதிக நகைகள் அணியாது, இருக்கிறாள்.]

கம:—எப்பொழுதுதான் நல்ல காலம் பிறக்குமோ? எப்பொழுது என் எண்ணம் நிறைவேறுமோ? என் தாய் இறந்தது முதல் என்னுடைய செல்வாக்கும் சுகமும் குறைந்து போயிருந்தாலும், என் தந்தையையே என் தெய்வமாகக் கொண்டு, என் மாற்றுந் தாயால் ஏற்பட்ட கஷ்டங்களையும் பொறுத்து வந்தேன். இப்பொழுது எனக்குப் பதினெட்டு வயதாயும், நான் படித்தும், என்னுடைய எண்ணப்படி நான் காதலிக்கும் புருஷனை மணஞ் செய்து கொள்வதற்கு முடியாதபடி இருத்தலை நினைக்க நினைக்க என் துக்கம் மேலிடுகிறது. எனது சிற்றன்னையோ என் விஷயத்தைப் பற்றிக் கவனிப்பதே யில்லை; தான் சிங்காரம் செய்துகொள்வதிலும், தன் பிறந்த வீட்டு மனிதர்களுக்கு உபசாரம் செய்வதிலுமே கண்ணும் கருத்துமா யிருக்கிறாள். என் தந்தையோ, இந்த யோகி வந்தாலும் வந்தார், தன் வேலையையும் கவனியாமல், ஒரே பித்தம் பிடித்தவர் போல், பஜனையும் ததீயாராதனையும் செய்துகொண்டு, காலத்தைக் கழிக்கிறாரே யொழிய, நான் இருக்கிறேன் என்பதையுங் கூட கவனிக்கிற தில்லை. என் தமயன் தன்னுடைய சிநேகிதர் ஒருவரை மணம் செய்து கொள்ளும்படி முதலில் சொல்லிய போதிலும், என் காதலருடைய குணாதிசயங்களைப் பார்த்த பிறகு, இவரை நான் மணப்பதில் தனக்குப் பூரண சம்மத மிருக்கிற தென்று கூறி யிருக்கிறான். ஆயினும் எனது தந்தையின் மனம் எப்படி யிருக்கின்றதோ?— அவர் வழிபடும் ஸ்ரீ கிருஷ்ண பகவானே என்னைக் காத்தருளி என் தந்தையின் மனதைத் திருப்பி
S. யருள வேண்டும். (கைகூப்பித் துதித்துப் பாடுகிறாள்.)

[அனந்தய்யங்கார் இடதுபுறம் மெல்ல வருகிறான். அவன் (Suit) ஸூட் தரித்துள்ளான்; கிராப் செய்துள்ள தலையை ஒழுங்காய் வாரி வகிர் எடுத் துள்ளான்; வலது கையில் ஒரு (walking stick) வாகிங்க் ஸ்டிக் வைத்திருக்கிறான். கமலம் துதித்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவள் பின்னால் வந்து நின்று, கடைசியில் தானும் கை கூப்பிய வண்ணம் சேர்ந்து
S. பாடுகிறான். உடனே கமலம் திடுக்கிட்டு எழுந்து, திரும்பிப் பார்த்து, நாணத்துடன் வலது புறம் திரும்பி நகர்ந்து நிற்கிறாள். அனந்தய்யங்கார், பெஞ்சின் முன்பாக வந்து,

அவளுக்கு இடதுபுறத்தில் நின்று, அவளைப் புன்சிரிப்புடன் பார்த்து நிற்கிறான்.]

அன:—கமலா! நான் உன்னுடைய தியானத்தையும் இனிய பாட்டையும் கெடுத்ததற்கு மன்னிப்பாய்.

கம:—தாங்கள் வந்ததையே கவனிக்க வில்லை; தாங்கள் என்னோடு பாடிய பிறகுதான் தெரிந்தது;— உட்காருங்கள்.

அன:—(அவளையும் உட்காரும்படி ஜாடை செய்து, இருவரும் உட்கார்ந்த பின்னர், சற்று யோசித்து, பெரு மூச்சு விட்டு) உன்னுடன் பாடியது ஒரு விதத்தில் எனக்கு வருத்தம் உண்டாக்குகின்றது.

கம:—இதென்ன விந்தையா யிருக்கிறது! ஸங்கீதம் வருத்தத்தைத் தருமோ? அதுவும், நான் ஸ்ரீ கண்ண பிரானைத் துதித்துப் பாடி யிருக்க, ஆனந்த நிதியான அவர் அருளால், உத்ஸாஹ மல்லவோ உண்டாக வேண்டும்?

அன:—நீ சொல்லுவ துண்மையே. ஆயினும், சில சந்தர்ப்பங்களை யோசித்துப் பார்த்தால், நான் உன்னுடன் பாடியதுதான் மிஞ்சு மென்று தோன்றுகிறது.

கம:—அதேன்?

அன:—கமலா! வெகு நாளாக நான் உன்னிடம் ஒரு விஷயம் கூறலாம் என்றிருந்தேன். ஆயினும், இதுவரையில், சொல் வதற்கும் கூச்சமா யிருந்தது.— அதிருக்கட்டும்;— உன் னுடைய மனோரதத்தைப் பூர்த்தி செய்விக்க வேண்டுமென்று ஸ்ரீ கண்ண பிரானைத் தோத்திரம் செய்தாயே, அது யார் விஷய மாக என்று நான் கேட்க லாமோ?

கம:—(தலை குனிந்து, வெட்கத்துடன், முகத்தைச் சற்று வலது புறம் திருப்பிக்கொண்டு, கடைக் கண்ணால் அனந்தய்யங் காரைப் பார்த்த வண்ணம்) தங்களுக்கு என்ன தோன்று கின்றது?

அன:—(கமலத்தைக் கவலை யுடனும், சிறிது விஷமத் துடனும், உற்றுப் பார்த்துக் கொண்டே) உன் தமய னுடைய சிநேகிதன்—

கம:—யார் அது?

அன:—உன்னுடைய தமயன் வெகு நாளாய் உனக்கு மணஞ் செய்து வைக்க வேண்டு மென்று எண்ணும் செளந்தர ராஜ னிடந்தான் உன் மனமும் நாடுகின்றது என்று நான் சந்தே கித்தேன்.— அவனைத் தான் நீ கல்லியாணம் செய்து கொள்ளப் போவதாக ஊரில் எல்லோரும் பேசிக் கொள்ளு கிறார்கள்.—

கம:—சரி! உங்களுக்குத்தான் தெரிந்து விட்டதே; என்னைக் கேட்பானேன்?

அன:—உன் எண்ணம் என்னவோ?

கம:—என் எண்ணமா?— நீங்கள் தான் சொல்லி விட்டீர்களே.— உங்கள் அபிப்பிராய மென்ன?

அன:—நீ அவனையே மணஞ் செய்.

கம:—உண்மையில், உங்கள் எண்ணம் அப்படித்தானா?

அன:—இதி லென்ன சந்தேகம்?— நல்லவன்; சிறியவன்; அழகானவன்; பணமு மிருக்கிறது;— என்ன?

கம:—நீங்கள் இவ்வளவு சொல்லிய பிறகு, அதன்படித்தானே நான் செய்ய வேண்டும்?

அன:—அப்படி நடத்தல் உனக்கு சந்தோஷ முண்டாக்கு மென்றே தோன்றுகிறது.

கம:—என் சந்தோஷத்திற்கு என்ன குறைவு?

அன:—பெண்ணே! நீ திருப்தி யடைந்தால் போதும் எனக்கு.

கம:—(எழுந்து, நகர்ந்து நின்று, ஒரு புறமாக) 'பெண்ணே!'— இதற்கும் வந்துவிட்டதா?

அன:—என்ன யோசிக்கின்றாய்?

கம:—ஒன்றுமில்லை; உங்களுக்கு அது திருப்தியா யிருக்குமானால், நீங்கள் சொல்லிய படியே செய்கிறேன்.

அன:—(கோபத்துடன் எழுந்து) இவ்வளவு தானா உன்னுடைய காதல்? நீ இதுவரையில் என்னிடம் சொல்லியதும் நடந்து கொண்டதும் வெறும் வேஷமா?

கம:—தயவு செய்து இனி அவற்றை யெல்லாம் பற்றி என்னிடம் பேச வேண்டாம். தாங்கள்தான் சற்று முன்பு என் தமயன் சிநேகிதரை மணம் புரிந்து கொள்ளும்படி புத்திமதி கூறினீர் களே; அதற்காகவே நான் அவ் விதம் செய்கிறேன்.

அன:—நான் சொன்னதை ஒரு வியாஜமாக வைத்துக் கொள்ளாதே. நீ முன்பே எல்லாம் தீர்மானித்துவிட்டு, இப்பொழுது நான் கூறிய வார்த்தையை ஒரு சாக்காக வைத்து, நீ முன்பு என்னிடம் கூறிய சொல்லினின்றும் தவறப் பார்க்கிறாய். உண்மையில் உனக்கு என்னிடம் அன்பே யிருந்த தில்லை.

[பதுமறுபன் வலது புறம் மெல்ல வந்து, எட்டிப் பார்த்து, இருவரையும் சற்று கவனித்துவிட்டு, மறைவில் நிற்கிறான். அவன் (Suit) ஸூட் தரித்திருக்கிறான்; கிராப் செய்த தலையை நன்றாய் வாரி யிருக்கிறான்].

கம:—(சற்று யோசித்து) உங்களுக்கு எப்படி இஷ்டமோ அப்படியே நினைத்துக் கொள்ளுங்கள்.

அன:—என் மனம் புண்பட் டிருப்பது எனக்குத் தெரியும். எவ்வளவோ இடங்களில் எனக்குப் பெண் கொடுப்பதாகச் சொன்னார்கள். அவை யெல்லாவற்றையும் விட்டு உன்னையே நாடியதின் பலன் எனக்குக் கிடைத்தது!

கம:—இப்பொழுது என்ன முழுகிப் போய்விட்டது? உங்களுக்குப் பிடித்த பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டால், வருத்த மெல்லாம் சுலபமாய் நீங்கி விடுகிறது.

அன:—சுலபம்!— நான் உன்னையே நினைத்து நினைத்து மனமுருகி யிருக்கவும், நீ யென்னை அசட்டை செய்துவிட்டு, என் கண் முன்பாகவே, இன்னொருவனை மணந்து அவனுடன் சுகமாக யிருப்பதை நான் பார்ப்பதா?

கம:—அப்படி யிருத்தல் தங்க ளுடைய பெருந் தன்மையைக் காண்பிக்கும்.—ஐயோ! தாங்கள் சொல்லும் விவாகம் முன்பே நடந் திருக்கக் கூடாதா?

அன:—அது உனது உண்மையான கோரிக்கையா?

கம:—ஆமாம்.

அன:—இதை விட எனக்கு அவமானம் வேறென்ன இருக்கின்றது? என்னுடைய துயரத்தை மறக்க, நான் உடனே சென்று, கிருஷ்ணய்யங்கார் பெண்ணை மணஞ் செய்து கொள்ளுகிறேன். (இடது புறம் போகப் புறப்படுகிறான்.)

கம:—அது தான் நல்லது.

அன:—(திரும்பி) உன்னுடைய நடத்தையால் தான் இப்படி செய்ய வேண்டி வருகிறது.—

கம:—நிரம்பவும் சந்தோஷம்.—

அன:—இதுதான் கடைசி முறை, நானுன்னைப் பார்ப்பது.— (இடது புறம் போய்க் கொண் டிருக்கிறான்.)

கம:—அப்படியே யிருக்கட்டும்.

(பத்மனுபன் வலது புறத்தில் சற்று முன் வந்து "ஹா!" என்று வாய் விட்டுக் கூற, அது கேட்டு அனந்தன் திரும்பி வருவதைப் பார்த்து, மறுபடியும் வலது புறம் மறைந்து கொள்கிறான்.)

அன:—(இடதுபுறம் திரும்பி வந்து) என்ன?

கம:—என்ன ஸமாசாரம்? ஏன் திரும்பி வந்தீர்கள்?

அன:—நீ என்னைக் கூப்பிட வில்லை?

கம: —(பரிஹாஸச் சிரிப்புடன்) நானு?

அன:—ஆனால் சரி; கடைசி முறை— நான் போய் வருகிறேன்.

கம:—திவ்வியமாய்.

[அனந்தன் வருத்தத் துடனும் கோபத்துடனும் இடது புறம் போகப் புறப்பட, அவனை வருத்தத்துடன் பார்த்த வண்ணம் கமலம் நின்றுகொண்டிருக்க, பத்மனுபன் வலது புறம் வேகமாய் ஓடி வந்து அனந்தன் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு இடது புறம் திரும்பி வருகிறான்.]

அன:—(தனக்கு வர இஷ்டமில்லாதது போல் பாவனை செய்து, பத்மனுபன் கையைத் தன் கையிலிருந்து பிடித்து இழுத்துத் தள்ளிக் கொண்டு) என்ன பத்மனுபா! என்னை எதற்கு தொந்தரவு செய்கிறாய்?

பது:—(அனந்தன் கையைப் பிடித்துக்கொண்டு) இப்படி வா, சொல்கிறேன்.

அன:—ஹூம் ஹூம்;—எனக்கு வருகிற கோபம் அடக்க முடிய வில்லை. உன் தங்கை சொல்லியபடி நான் செய்வதை நீ ஏன் தடுக்கிறாய்? (இடது புறம் திரும்பப் பார்க்கிறான்).

பது:—கொஞ்சம் இரு; நான் சொல்கிறேன்.

அன:—முடியாது; நான் தீர்மானித்து விட்டேன்.

கம:—(வலது புறம் திரும்பிக் கொண்டு) அவருக்கு என்னைப் பார்ப்பதே விஷமா யிருக்கிறதே! நான் எதற்காக இங்கு இருக்க வேண்டும்? (வலது புறம் போய்க்கொண்டிருக்கிறாள்).

பது:—(வலது புறம் திரும்பிப் பார்த்து, கமலம் போவதைக் கண்டு பத்மநுபன் கையை விட்டு விட்டு, வலதுபுறம் ஓடி, கமலத்தின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வந்து) கமலம்! ஏன் போகிறாய்?

கம:—என் கையை விடு. (கையைத் திமிறிக் கொண்டு, வலது புறம் நோக்கித் திரும்பி நிற்கிறாள்.)

அன:—(இடதுபுறம் திரும்பிக் கொண்டு) அவளுக்கு என்னைக் காண்பது ஒரு பேயைக் காண்பது போல் இருக்கின்றதோ என்னமோ? நான் ஏன் அவள் வருத்தத்திற்குக் காரணமாய் இருக்க வேண்டும்? (இடதுபுறம் போகப் புறப்படுகிறான்.)

பது:—(வலது கையால் கமலத்தின் கையைப் பிடித்துக் கொண்டே இடது புறம் ஓடி, அனந்தன் வலது கையைத் தன் இடது கையால் பிடித்து அவனையும் இழுத்துக்கொண்டு மீண்டும் திரும்பி வந்து) அசடுகளா! நன்றா யிருக்கிறது நீங்களிருவரும் சண்டை போட்டுக் கொள்வது! இப்படி வாருங்கள்; நான் சொல்வதைக் கேளுங்கள். (அவர்கள் கைகளை விடுகிறான்.)

அன:—பத்மநுபா! உன் எண்ணம் என்ன?

கம:—அண்ணா! நீ என்ன செய்யப் போகிறாய்?

பது:—உங்க ளிருவர்களையும் திருத்தப் போகிறேன்.—(அனந்தனைப் பார்த்து) படித்தவன், நீ இப்படி சண்டை போடலாமா, அதுவும் ஒரு பெண் பிள்ளையோடு?

அன:—உன் தங்கை என்ன விதமாகப் பேசினாள் தெரியுமா?

பது:—கோர்ட்டில் வாதம் செய்கிறது போலவா ஸ்திரீக ளிடம் வார்த்தை சொல்வது? இது தெரியாமல் நீ இப்படி கோபித்துப் பேசலாமா?—(கமலத்தைப் பார்த்து) கமலம்! நீ என்ன நாட்டுப்புறமா? படியாத முண்டமா? நீயும் இப்படி சண்டை போடலாமா?

கம:—அவர் என்னென்ன சொன்னார், என்ன செய்தார் என்பதைக் கவனித்தாயா?

பது:—இருவர்கள் செய்ததும் தவறுதான்.— (சிரித்து) ஆனால், இது ஒரு நல்ல ஒத்திகை!

அன,கம:—என்ன?

பத்:—கல்லியாணம் செய்து கொண்டால், பிற்பாடு அடிக்கடி சண்டை போட்டுக்கொள்ள வேண்டியிருக்குமே, அதை இப்பொழுது முதல் பழக்கிக் கொள்ள வேண்டு மென்று பார்த்தீர்கள் போலும்.—அதிருக்கட்டும்.—(அனந்தனைப் பார்த்து) கமலத்தின் உண்மையான எண்ணம் எனக்குத் தெரியும்; அவள் உன்னை மணக்கும் நாளையே எதிர்பார்த் திருக்கிறாள். —(கமலத்தைப் பார்த்து) கமலம்! அனந்தன் உன்னை மனைவியாக அடைவதை விட வேறு ஒன்றையும் இன்பமாக மதிக்கவில்லை யென்பதற்கு நான் சாக்ஷி.

கம:—அப்படியானால், ஏன் அவர் என்னை இன்னொருவரைக் கல்வியாணஞ் செய்து கொள்ளச் சொன்னார்?

அன:—உன் தங்கை ஏன் விஷமமாய் என்னுடைய அபிப்பிராயத்தைக் கேட்டாள்?

பது:—(நகைத்து) காதலுக்குக் கண்ணில்லை யென்று தான் சொல்கிறார்கள்; அது ஞானத்தையும் அழித்து விடுமா இப்படி? நீங்கள் இருவரும் படித்த முண்டங்கள்; இப்படி வாருங்கள்—. (இருவர் கைகளையும் பிடித்துக் கொண்டு) நீங்கள் இருவரும், உங்களுக்குத் தெரியாமலே, ஒருவரை யொருவர் வெகு அன்னியோன்னியமாய்க் காதலிக்கிறீர்கள்.

அன.— (மெள்ள, பத்மநாபனின் பின்புறமாய், கமலத்தை கடைக் கண்ணால் பார்த்து முறுவல் செய்து) உன் தங்கை என்ன சொல்லுகிறாளோ?

கம:—(திருட்டுத்தனமாய், பத்மநாபன் பின்புறமாக, அனந்தனைப் பார்த்து முறுவல் செய்து கொண்டு) அவர் அபிப்பிராயம் எப்படியோ?

பது:—(இருவர் கைகளையும் சேர்த்து) காதலர்களைப் போல் கஷடர்களைக் கண்டதே யில்லை!

கம:—அண்ணா! உன் சமாசாரம் பின்னால் தெரியும்.

அன:—கமலம்! அப்படி சொல்.— அதிருக்கட்டும்; நீ என்னிடம் நடந்து கொண்டதும், எனக்குக் கோப முண்டாக்கியதும், விஷமந்தானே?

கம:—நீங்கள் அப்படி கொடுமையாய்ப் பேசியது அழகோ?

பத்:—உங்கள் சண்டையை இப்போது நிறுத்திக் கொள்ளுங்கள்; இதற்கு வட்டியுடன் சேர்த்துக் கல்யாணம் ஆன பின்பு வைத்துக் கொள்ளலாம்.— அதிருக்கட்டும்; இனி எப்படி என்னுடைய தந்தையையும் சிற்றன்னையையும் இதற்கு ஒப்புக் கொள்ளும்படி செய்வதென்பதைப் பற்றி நாம் நன்றாய் யோசிக்க வேண்டும்.

கம:—நாம் போஜனம் செய்த பிறகு, மேல் மாடியில் உட்கார்ந்து அதைப் பற்றி ஆலோசிப்போம்.

பது:— (இருவர் கைகளையும் மறுபடி பிடித்துக் கொண்டு) நம்முடைய எண்ணம் நிறைவேறும்படி அருள் செய்யக் கண்ணபிரானைத் தியானித்துச் செல்வோம்.

மூவரும்:— S. (தியானித்துப் பாடிய பிறகு, வலது புறம், போகிறார்கள்.)

அங்கம் 1.

காட்சி 3.

[ரகுநாதய்யங்கார் பங்களாவின் ஹால் நடுவில் ஒரு (Teapoy) சிறு மேஜையும், அதன் பின் புறம் ஒரு (Sofa) ஸோப்வாவும் போடப்பட்டிருக்கின்றன.— முன் காட்சிக்கு மறுநாள் காலை 7மணி.— காலையில் ஸ்நானம் பூஜை முதலியன முடித்து விட்டு, ஸோப்வாவில் இடது புறத்தில் ரகுநாதய்யங்காரும் வலது புறத்தில் கோதையம்மாளும் உட்கார்ந்து (Coffee) காப்பி சாப்பிட்டுக் கொண் டிருக்கிறார்கள். கோதையம்மாள் ஒரு விலை யுயர்ந்த புடவையை ஸ்ரீவைஷ்ணவ ஸ்திரீகள் ரீதியில் உடுத்தி யிருக்கிறாள்; அதிகமாக நகைகள் அணிந்திருக்கிறாள்.]

ரகு:—கோதை! உன் னிடத்தில் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டு மென்றுதான் தனியே இங்கு நான் உட்கார்ந்தது.

கோதை:—என்ன விசேஷம்?

ரகு:—நேற்றிரவு நம் பது ஒரு விஷயம் சொன்னான்.

கோதை:—பதுவா! என்ன?

ரகு:—நம் குழந்தை கமலத்தின் கல்யாணத்தைப் பற்றி ஒன்றும் ஏற்பாடு செய்ய வில்லையே என்று கவலைப் பட்டான்.

கோதை:—ஆமாம்;— அதைப் பற்றி நானும் பேசலா மென்றுதானிருந்தேன். ஆனால், — சாவகாசம் எங் கிருக்கிறது நமக்கு இப்பொழுது?

ரகு:—பெண்ணுக்கு வயதாகியும் இன்னும் மணம் செய்ய வில்லையென்று ஊரி லுள்ளவர்கள் எல்லாரும் ஏதேதோ பேசுகிறார்களாம்.

கோதை:—ஊரார்க ளுடைய பேச்சுக்குக் கேட்பானேன்? இப்படித்தான் என்னைப் பற்றியும் சொன்னார்க ளென்று, அவர்கள் வாய்க்குப் பயந்து, என்னுடைய தாயார் எங்கேயாவது என்னைத் தள்ளினால் போது மென்று—உம்—கமலத்தின் விஷயத்திலாவது நாம் ஒன்றும் அவசரப் பட்டுச் செய்ய வேண்டா மென்று தான் சும்மா யிருந்தேன்.

ரகு:—ஸரிதான்; நல்ல வரனைப் பார்த்து ஏற்பாடு செய்ய வேண்டுமே!

கோதை:—ஆமாம்;— கமலம்— ஏதோ— அனந்தய்யங்காரைக் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டப் படுகிறாள் போல் தோன்றுகிறதே?

ரகு:—அப்படித்தான் பதுவும் சொன்னான்.— ஆனால், எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.

கோதை:—என்னவோ?

ரகு:—நாம் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுப்பதென்றால் ஸத் பாத்திரத்தைப் பார்த்துக் கொடுக்க வேண்டும். எல்லா தானங்களிலும் கன்னிகா தானம் விசேஷம். ஆகையால், நம் முடைய மனதிற் குவந்த சிரேஷ்ட மான வரனைப் பார்த்து, அவருக்கு நமது பெண்ணைத் தாரை வார்த்துக் கொடுத்தால் இஹத்திற்கும் பரத்திற்கும் பலன் உண்டாகும்.

கோதை:—நீங்கள் சொல்லுவது எனக்கு ஒன்றும் புரியவில்லையே.

ரகு:—அவசரப் படுகிருயே? சென்ற இரண்டு மாதமாக, நமது வீட்டில் ஸ்ரீ கிருஷ்ணாநந்த யோகியார் வந்தது முதல், அவருடைய ஞானத்தையும் பக்தியையும் சீலத்தையுங் கண்டு ஆச்சரியப் பட்டு, என் மன மெல்லாம் அவரிடத்தி லேயே குடி கொண் டிருக்கிறது. அவரை யொத்த சிரேஷ்டர்கள் இவ் வுலகில் இருப்பார்களோ வென்று சந்தேகிக்கும் படி அவ்வளவு நற் குணங்கள் எல்லாம் அவ ரிடத்தில் சேர்ந் திருக்கின்றன.

கோதை:—ஸரி.—

ரகு:—அதனால் அவருக்கே நமது கமலத்தைக் கல்லியாணம் செய்து கொடுத்தால், நாம் ஜன்ம மெடுத்தது ஸபலமாய், கன்னிகா தானம் செய்ததின் பூரண பலனை யடைவோம்.

கோதை:—(ஆச்சரியத் துடன்) ஐயோ! இ தென்ன இப்படிச் சொல்லு கிறீர்களே!—நான் யோகியாரைப் பற்றி ஒன்றும் குறை சொல்ல வில்லை.— ஆயினும், ஒரு பரதேசிக்கா நமது பெண்ணைக் கொடுப்பது?— தனக்குப் பிறந்த பெண்ணைப் இருந்தால் இப்படிச் செய்வானா என்று என்னை ஊரார் சொல்வார்களே?— அதிருக்கட்டும்;— பது என்ன சொன்னன்?

ரகு:—நான் அவ னிடம் இதைப் பற்றிச் சொல்லவில்லை. அவனுக்கு எந்தக் காரணத்தினலோ இந்த ஸ்வாமியைக் கண்டால் பிடிக்க வில்லை.

கோதை:—அவனுக்கு இஷ்ட மில்லாததைச் செய்வா னேன்?— கமலத்தைக் கேட்டீர்களா?

ரகு:—அவளை இங்கு வரச் சொல்லி ரங்கனை அனுப்பினேன். அவள் தீர்த்த மாடி தியானம் செய்து விட்டு வருவதாகச் சொன்னள்.— அதோ பார், அவளுடைய குரல்தான் கேட்கிறது.

S. (பின்புறத்தில் கமலம் மனம் கசிந்து கடவுளைத் துதித்துப் பாடும் பாட்டு மிருதுவாய்க் கேட்கிறது.)

கோதை:—ஐயோ! பாவம்! தனக்குத் தன் மனப்படி விவாஹமாக வேண்டு மென்று கவலை யுடன் பாடுகிறாள். (பெருமூச்சு விட்டு) நானும் இப்படித்தான் கவலைப் பட்டேன்.—அதிருக்கட்டும், யோகியைக் கேட்டீர்களோ?

ரகு:—காலை பூஜை முடித்த பிறகு இங்கே வரும்படியாக ரங்கனைச் சொல்லச் சொன்னேன்; இப்பொழுது வருவார்.

கோதை:—அவருடைய பூர்வ விருத்தாந்தங்கள் ஒன்றும் நமக்குத் தெரியாதே! அப்படி யிருக்க, நாம் நீடெ ரென்று இப்படிச் செய்ய லாமா?

ரகு:—கோதை! என்ன இப்படிச் சொல்லுகிறாய்! நீயும் பதுவுடன் சேர்ந்து கொண்டாயா என்ன?

கோதை:—சேராமல் என்ன செய்வது? அவன் சொல்லுவதும் செய்வதும் எனக்குத் திருப்திதான்.— (வலது புறம் கிருஷ்ணாநந்த யோகி வருவதைப் பார்த்து, திடுக்கிட்டு எழுந்து, ஸோப்வாவின் பின்னால் நின்று) அதோ அவர் வருகிறார்.

ரகு:—(எழுந்து, வலது புறம் நோக்கி, கை கூப்பி) வரவேண்டும் வரவேண்டும்.—

(ஸ்ரீ கிருஷ்ணாநந்த யோகியார் வலது புறம் வந்து, இடது புறம் ஒரு நாற்காலியில் உட்கார, அவர் உத்திரவின்படி ரகுநாதய்யங்காரும் ஸோப்வாவில் உட்காருகிறார்.)

யோகி:—என்ன விசேஷம் தாங்கள் அடியே னிடம் ஏதோ பேச வேண்டு மென்று சொன்னீர்க ளாமே?

ரகு:—ஆமாம்.—அ— தேவரீர் இங்கு எழுந்தருளியது முதல்—அடியே னுடைய குடிசை கோகுல ப்ருந்தாவனம் மாதிரி மாறி விட்டது. தேவரீ ருடைய மஹிமையையும் தூய்மையையும் கண்டு களித்து, ஆநந்த பரவச மாகி, என்னுடைய ஜன்மம் ஸபல மாய் நான் கடைத் தேறப் பண்ணி யருளிய தேவரீருக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறே னென்று யோசித்தேன்.

யோகி:—எல்லாம் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் செயலா யிருக்க, நான் செய்தது என்ன? அவன் தன் னுடைய நிஜ பக்தர்களுக்கு அருள் புரிவதற்கு அடியேனைப் போன்ற

துரும்புகளையும் ஒரு கருவியாகக் கொண்டு அவன் செய்யும் லீலையே தவிற, என் போன்ற பதர்கள் செய்வதென்ன இருக்கின்றது? அவ னன்றி ஓர் அணுவும் அசையாது; எல்லாம் எனை யாளும் ஈசன் செயல்!

ரகு:—(ஆச்சரியத்துடனும், முகமலர்ச்சியுடனும் கை கூப்பிக் கொண்டு) பகவான் என்னைத் திருத்தி யாளுவதற்கு தேவரீரை அனுப்பியதால், அடியே னுடைய க்ருதஜ்ஞதை யைக் காட்ட ஒரு போக்குவிடாக, அடியேன் ஒன்று செய்ய உத்தேசித் திருக்கிறேன்.

யோகி:—"மஹாந்தோ நிவஸந்த ஸந்த: வஸந்தவத் லோக ஹிதம் சரந்த:" என்றபடி, பகவா னுடைய தூதர்களாய், அவ னுடைய கைங்கர்யத்தில் ஈடு பட்டவர்களா யிருக்கும் மஹான் கள், வஸந்த காலத்தைப் போலவும் கார் மேகத்தைப் போலவும், ப்ரதி பலன் கருதாது, எல்லோருக்கும் உதவுவதே தங்கள் இயல்பாக வுள்ளவர்க ளாதலால், அவர்கள் வழியைப் பின் பற்றி வரும் அடியேனும் யாதொரு ப்ரதி ப்ரயோஜனத் தையும் ஏற்றுக்கொள்ள லாகாது.

ரகு:—(ஆச்சரியத்துடன்) ஆஹா! ஆஹா!! (திரும்பி கோதையைப் பார்த்து) என்ன பெருந்தன்மை!—ஸ்வாமியி னுடைய வார்த்தைகள் என் னுடைய ஆர்வத்தை அதிக மாக்கி என் னுடைய தீர்மானத்தைப் பலப்படுத்து கின்றன. (யோகியைப் பார்த்து) அடியேன் சொல்வதைத் தயவு செய்து கேட்க வேண்டும்.—ஸ்வாமி அடியே னுடைய க்ருஹத்திற்கு வந்து என்னைத் திருத்தி யாண்டு ஸந் மார்க்கத்தில் சேர்த்தது முதல், நம் மிருவருக்கும் ஒரு சம்பந்தம் ஏற்பட்டு விட்டதால் அதை நிரந்தரமாய்ச் செய்வது எப்படி யென்று யோசித்தேன்.—(எழுந்து கை கூப்பி) ஸ்வாமி! அடியே னுடைய குமாரத்தியை பாணிக்கிரஹணம் செய்து எங்களைக் காத்தருள வேண்டும்.

யோகி:—(நகைப்பது போல் பாவனை செய்து) ரகுநாதய்யங்கார்! உட்காரும். (அவர் உட்காருகிறார்). எனக்கு மணம் என்ன வேண்டி யிருக்கிறது? அடியேன் ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவை

என்னுடைய நாயகனுகக் கொண்டு, என் உடல், பொருள், ஆவி மூன்றையும் அவருக்கே அர்ப்பணம் செய்த பிறகு, இல்லறத்தில் என் மனம் நாடுமோ? ஸம்ஸார ஸாகரத்தினின்று எப்படித் தாண்டிப் பிழைப்பதென்று ஏங்கும் மனிதர்களுக்கு ஒரு தெப்பக் கட்டை போல் தோன்றி உதவிய அந்த கோபாலன், வேணு கான லோலன், யசோதை வத்ஸலன், கோபீ ஜன ரஞ்சிதன், ஒருவனையே என் மனதில் ஸதா ஸர்வ காலமும் எண்ணுவதை விட்டு மண விலங்கை நான் ஏற்றுக் கொள்ளவோ?

கோதை:—ஸ்வாமீ! அப்படியே எல்லாரும் இருந்து விட்டால், என் போன்ற ஸ்திரீகளின் கதி என்ன வாகும்? மணம் செய்து கொள்ளாத மங்கைகளுக்கு மோக்ஷம் கிடையாது என்கிறார்களே!

யோகி:—பெண்மணீ! ஸ்திரீகளும் பகவானையே தங்கள் நாயகனுகக் கொண்டாலும் போதும் என்றும், அவர்கள் மணம் செய்து கொள்ள வேண்டிய தில்லை யென்றும், என்னுடைய அபிப்பிராயம். அது எப்படி யிருப்பினும், என் போன்றவருக்கு மனம் அந்த மஹா புருஷன் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிடமே தங்கி யிருக்குமேயொழிய, மாதரை மணப்பதிற் செல்லுமோ?

ரகு:—ஸ்வாமி அப்படி சொல்லி விட லாகாது. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவே கிரஹஸ் தாச்ரமத்தி லிருக்க வில்லையா?

யோகி:—(சற்று யோசிப்பதுபோ லிருந்து) என்னையும், என் உடலையும் என் உடைமையையும் அவனுடைய சக்கரப் பொறி ஒற்றிக்கொண்டு, அவன் குறிப்பின் படியே ஒழுக வேண்டிய அடியேனுக்கு, இது வேண்டும் இது வேண்டா மென்றுவது, இதைத் தான் நான் செய்வேன் இதை நான் செய்ய மாட்டேன் என்றுவது, எண்ணுவது முறை யாகாது. எம்பெருமான் எனக்கு எது யுக்தம் என்று நினைக்கிறாரோ அப்படியே அவ ரருளுவார் என்று நம்பி யுள்ள நான், எனக் கெனச் செய லில்லாத நான், என்னைப் பற்றிய மட்டில் நான் சொல்லுவ தென்ன இருக்கின்றது?—(எழுந்து நிற்கிறார்; ரகுநாதய்யங்காரும் எழுந்து நிற்கிறார்).— எல்லாம்

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் திருவுள்ளப்படி நடக்கும்!— (சற்று நின்று, மற்றிருவரையும் பார்த்து விட்டு, தலை நிமிர்ந்து, கை கூப்பி, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைத் துதிப்பது போல் மௌனமாக நின்று, கை கூப்பிய வண்ணம், ஒன்றும் பேசாமல், வலது புறம் போகிறார்.)

ரகு:—(போகிறவரைப் பார்த்துக் கொண்டே ஆச்சரியத்துடன் கை கூப்பி நின்று, சற்றுப் பொறுத்து, திரும்பி கோதையைப் பார்த்து) கோதை! இந்த மஹானுடைய பெருமையை என்ன சொல்லுவேன்! இப்பொழுது உன்னுடைய அபிப்பிராய மென்ன?

கோதை:—தங்களுடைய இஷ்டத்திற்கு நான் குறுக்கே சொல்
S. வேனோ?— ஆயினும், இல்லற வாழ்க்கையில் விருப்பமில்லாதவரை மணம் செய்து கொண்டால், பெண்களுக்கு என்ன சுகம்? அவர்கள் வாணாள் முழுவதும் வீணாள் ஆகுமல்லவா? இதைத் தாங்கள் சற்றுக் கவனித்து யோசிக்க வேண்டுமென்று கையெடுத்து வேண்டுகிறேன்.— தங்கள் பெண்ணாவது சுகமாக வாழ வேண்டுமென்று என்னுடைய எண்ணம். அவளையும் கேட்டு விட்டு, என்னுடைய மனோ நிலைமையையும் சற்றுக் கவனித்து, பிறகு தீர்மானம் செய்யுங்கள்.

ரகு:—கோதை! நீ இவ்வளவு வருத்தத்துடனும் பரிவுடனும் சொல்வதை நான் கவனியாம லிருப்பேனா?

கோதை:—தங்களிஷ்டப்படி நடப்பதற்கு நான் தடை சொன்னேன் என்று நினைக்கலாகாது.—

(கமலம், இடது புறமாக வந்து, கதவண்டை சற்று நின்று, கடைசி வார்த்தைகள் காதில் விழுந்ததையால், சிறிது யோசித்து, பிறகு, முன் வருகிறாள்.)

கமலம்:—அப்பா! என்ன விசேஷம்? எதற்காக என்னை அழைத்தீர்?

ரகு:—கமலா! நீ மிகவும் நல்ல பெண்ணாயிற்றே; நான் சொல்லும் வார்த்தையை நீ ஒரு நாளும் தட்டினதில்லையே?

கமலம்:—என்னை ப்ரீதியோடு வளர்த்த தந்தையாம் உமது எண்ணத்தின் படி நான் நடக்க வேண்டாமோ?

ரகு:—மிகவும் சந்தோஷம்.—அதிருக்கட்டும், கமலா! நம் வீட்டில் வந்திருக்கும் யோகியைப் பற்றி என்ன நினைக்கின்றாய்?

கமலம்:—அவரைப் பற்றி நான் என்ன நினைப்பது?

ரகு:—கமலம்! அவர் குணமும் மேன்மையும் நடத்தையும் உன் மனதிற்கு திருப்தியா யிருக்கின்றனவா? அவர் இவ் வீட்டி லேயே இனி மேல் எப் பொழுதும் இருக்கும்படிச் செய்தால் உனக்கு சம்மதியா யிருக்குமா?

கமலம்:—அதைப் பற்றி எனக் கென்ன? என் படிப்பு அதனால் கெடாது. உமக்குத் திருப்தியா யிருந்தால் அவ ரிருக்கட்டுமே.

கோதை:—கமலம்! அவர் சொல்வது உனக்குத் தெரிய வில்லையா?

கமலம்:—தெரியாம லென்ன;—பஜனை செய்வதனால் என் படிப்பு சிறிதும் கெடாது.

கோதை:—கமலம்! அவர் அதைப் பற்றிச் சொல்ல வில்லை.—உனக்குச் சீக்கிரம் கல்லியாணம் செய்து வைக்க வேண்டு மென்று நாங்கள் பேசிக் கொண் டிருந்தோம்.

கமலம்:—சரி.—

ரகு:—யோகிகள் நல்ல சீலவான்; எனக்கு மிகவும் சந்துஷ்டியா யிருக்கிறது, அவரைப் பார்த்தாலே. அவர் இனிமேல் எக் காலத்திலும் இங்கேயே இருக்க வேண்டு மென்று எனக்கு எண்ணம் உண்டாயிற்று.

கமலம்:—இருக்கட்டுமே, அதற்கு எனக் கென்ன தடை?

கோதை:—அதற்கு நீ சம்மதிக்க வேண்டாமோ?

கமலம்:—என் சம்மதம் எதற்கு?

ரகு:—அவரோடு நிரந்தர சம்பந்தம் நமக்கு இருக்க வேண்டு மென்று என் அபிப்பிராயம். நீ ஸம்மதித்தால், உன்னை அவருக்கு விவாஹம் செய்து வைத்து—

கமலம்:—(கோபத்துடன்) என்ன சொன்னீர்?

ரகு:—என் கமலம்?

கமலம்:—இது அண்ணாவுக்குத் தெரியுமோ?

ரகு:—என்னிஷ்டமா, அவனிஷ்டமா? நான் உன்னுடைய தந்தை; எனக்கு யார் இஷ்டமோ அவனுக்கு உன்னைக் கல்யாணம் செய்து வைப்பதற்கு அதிகார முண்டு.—

(பதுமனுபன் இடது புறத்திலிருந்து வருகிறான்.)

பது:—என்ன விசேஷம்! என் பெயர் சொல்லக் கேட்டேன்.

கமலம்:—அண்ணா! அப்பா ஏதோ சொல்லுகிறார். அதற்கு நீ தான் பதில் சொல்ல வேண்டும்.

கோதை:—பது! கமலத்தின் கல்யாணத்தைப் பற்றி நீ ஏதோ அவரிடம் சொன்னாயாமே? அது விஷய மாகத் தான் பேசிக் கொண் டிருந்தோம்.

கமலம்:—அண்ணா! நீ இவர்கள் மாதிரியா சொன்னாய்?

பது:—அப்பா என்ன சொன்னார்?

ரகு:—பது! நீ புத்திசாலி யாயிற்றே, உனக்குத் தெரியாததா? கமலத்திற்கும் நம் குலத்திற்கும் எது நல்லதோ, என்ன செய்தால் சுகிர்தம் உண்டாகுமோ, அதன்படித் தானே செய்ய வேண்டும்?

கமலம்:—அதற்காக என்னைப் பாழுங் கிணற்றில் தள்ளப் பார்க்கிறார்.

கோதை:—கமலம்! அப்படிச் சொல்லாதே. நான் அந்த மாதிரி பட்டு, மனம் நொந் திருக்கும் போது, ஒருகாலும் அப்படி நடக்க விட மாட்டேன்.

பது:—விஷய மென்ன?

கோதை:—உங்கள் அப்பா நம் அகத்தில் வந்திருக்கிற யோகிகளுக்குக் கமலத்தைக் கல்யாணம் செய்து கொடுக்கலா மென்று நினைக்கிறார்.

பது:—என்ன அநியாயம்!

கமலம்:—அண்ணா! நீ தான் சொல். (அழுகிறாள்).

ரகு:—நியாயத்தையும் அநியாயத்தையும் நீ தான் கண்டு விட்டாயோ? எனக்குத் தெரியாதது உனக்குத் தான் தெரியுமோ? அந்த மஹா னுடைய ஸம்பந்தம் நமக்குக் கிடைப்பதற்கு நாம் பூர்வ ஜன்மங்களில் எவ்வளவு பாக்கியம் செய் திருக்க வேண்டும்? அவரைப் பற்றி நினைக்கும் போ தெல்லாம், என் மனம் அப்படியே ஆநந்த பரவச மாகின்றது. அவருடன் பேசும் போதும், அவருடைய ஞான மொழிகளைக் கேட்கும் போதும், அவருடைய பக்தி ததும்பும் உபதேசங்களைப் பெறும் போதும், அவருடன் சேர்ந்து பூஜையும் பஜனையும் செய்யும் போதும், எனது ஆத்மா ஸந்துஷ்டி யடைவதற் களவே யில்லை. அவ ரொரு வருக்காக எதை வேண்டு மென்றாலும் இழப்பதற்குத் தயாரா யிருக்கிறேன். அவர்க் கெதிராக என் உத்தியோகமும், என் பொருள்களும், என் குழந்தைகளும், என் மனைவியும் த்ருண மாகவே தோன்றுகின்றன.

பது:—ஆஹா! என்ன பக்தி! என்ன ப்ரீதி! இவ்வளவு அன்பான தந்தை யிருக்கும் போது, கமலம்! உனக் கென்ன குறைவு!

ரகு:— பது! நான் பழகும் மாதிரி நீ அவருடன் பழகினால் அவ ருடைய மேன்மை உனக்குத் தெரியும். அவர் வந்தது முதல் இந்த ஊரில் எவ்வளவு பெயர்கள் நிர்மல சித்தராய், நற்குண முடையவராய், பக்தி பரவசராய், நற்கதி அடையும் மார்க்கத் தில் ப்ரவேசித் திருக்கிறார்கள். அத் தகைய மஹானைக் காட்டி லும், யார் கிடைக்கப் போகிறார்கள் நமது பெண்ணிற்கு!

பது:—கமலம்! இந்த மாதிரி ஆசாமி உனக்கு யார் கிடைக்கப் போகிறார்கள்? படிப்பை நிறுத்தி விட்டு, பஜனை செய்யக் கற்றுக் கொள்.

கோதை:— பது! விளையாடாதே; அவர் ஏதாவது கோபித்துக் கொள்ளப் போகிறார்.

பது:—சின்னம்மா! இப்படியும் அப்பாவுக்குப் பைத்தியம் பிடிக்கு மா? அவர் இந்த மாதிரி சொல்வதற்கு நீங்களும் சம்மதிக்க லாமா?

கோதை:—நான் படுகிற பாடு உனக்குத் தெரியாதா? அப்படியிருக்க, நானாக இதற்குச் சம்மதித்திருப்பேனோ? ஆயினும், அவர் இஷ்டப்படித் தானே நாம் நடக்க வேண்டும்.

பது:—அப்பா! கொஞ்சம் நீரே யோசித்துப் பாரும். நீர் சொல்லியதெல்லாம் எனக்கு பயம் உண்டாக்குகின்றது. வெறும் ஆஷாடபூதிகளையும் வேஷதாரிகளையும் பார்த்து நாம் மயங்கலாகாது. உண்மையில் பக்தனா யிருப்பவன் இவ் விதம் தடபுடலும் படாடோபமும் செய்ய மாட்டான். நானும் கமலமும் தினமும் காலையில் எழுந்ததும் மனமாறக் கடவுளைத் துதிக்க வில்லையா? பகவானின் காரிய மாகவே நான் எனது டாக்டர் வேலையைப் பார்க்க வில்லையா? உண்மையான பக்திக்கும் வெளி வேஷத்திற்கும் வித்தியாசத்தை நீர் பார்க்க வேண்டாமா? எது நிஜம் எது பொய் யென்று கண்டு பிடிப்பதற்கு உதவுவதே உமது வேலையா யிருக்க, இதில் மாத்திரம் உண்மை யுமக்குப் புலப்படாம லிருக்கின்றதே! வேஷதாரிகள் உண்மையாய் இருப்பவர்களைக் காட்டிலும் அதிகமாக நடித்துக் காட்டுவர் என்பது உமக்குத் தெரியாதா! பக்தியும் பஜனையும் பூஜையும் அவர்க ளுடைய அதிகச் செயல்களால் சீர் குலைந்து அழி வடைகின்றனவே. அப்படியிருக்க, அநந்தப்பயங்காரைப் போன்ற நல்ல வரன்களை விட்டு, அழகும் படிப்பும் குணமும் வாய்ந்த நம் கமலாவுக்கு இந்தக் கபட யோகியையா கணவனாகக் கொள்வது?

ரகு:—(கோபத்துடன்) முடிந்ததோ உன் பிரசங்கம்? உலகத்தில் நீ ஒருவன்தான் புத்திசாலி போல் இருக்கிறது?

பது:—நான் புத்திசாலி யாய் இல்லா விட்டாலும், உமது யோகியைப் போல் அயோக்கிய னில்லை. எது நிஜ மென்றும் எது பொய் யென்றும் பகுத் தறிவதற்கு எனக்குப் புத்தி யிருக்கிறது. உண்மையில், பகவா னிடத்தில் பக்தியோ டிருப்பதும், மன திளகிக் கசிந்துருகி பகவானைக் குறித்து ஸ்தோத்தரிப்பதும், நாம் மானிட ஜன்ம மெடுத்தது ஸபலம் ஆவதற்கு முக்கிய மென் றறிவேன். ஆயினும், இந்த யோகியைப் போல, வெறும் வெளி வேஷதாரிகளும், இங்கு பஜனை

தினங்களில் வருகிற பெரும்பாலரும் நிஜமான பக்தியைப் பரிஹாஸம் செய்கிறார்களென்றே நான் நினைக்கிறேன். இவர்களெல்லோரும் இவ்விதம் செய்வதையே தங்கள் பிழைப்பாகவும், தாங்கள் உலகில் செய்யும் அகிருத்தியங்களை மறைத்து நல்லவர்கள் போல் புலப்பட ஒரு மார்க்கமாகவும் கொண்டு, நாம் எந்தெந்த விஷயங்களில் மரியாதை வைக்கிறோமோ அவைகளையே தங்கள் ஆயுதங்களாக வைத்து நம்மை ஏமாற்றிக் கெடுத்துத் தங்களுடைய காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளுகிறார்கள். இப்படியிருந்தார்களா நமது பூர்வாசாரியர்களும், பக்த சிரோமணிகளும்? ஆழ்வார்கள், நாயன்மார்கள், கபீர்தாஸ், புரந்தரதாஸ், ராமதாஸ் முதலியவர்களுடைய சரித்திரங்களையும் இந்த யோகியார் நடத்தையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நான் சொல்லுவது விளங்கும்.

ரகு:—(கோபத்துடன்) போதும், நிறுத்து உன் உபந்யாஸத்தை.

பது:—நான் உபந்யாஸம் செய்ய வரவில்லை. உமக்கு இந்த யோகியிடத்திலிருக்கும் பைத்தியத்தால் நீர் அறிந்தும் மறந்து போயுள்ள விஷயங்களை ஞாபகமூட்டினேன்; அவ்வளவுதான்.—அதிருக்கட்டும்; — முன்பு நான் அநந்தய்யங்காரைப் பற்றி உம்மிடம் கூறிய பொழுது நீர் மனம் ஒப்பியதால்லவோ அவன் இங்கு அடிக்கடி வருவதற்கும், கமலாவுடன் பழகுவதற்கும் நான் சம்மதித்தேன். அதை இப்பொழுது நீர் மறந்தீரோ?

ரகு:—அவனைப் பற்றி விசாரித்தேன். அவனுக்கு பக்தி என்பதே கிடையாது; அவன் நெற்றியில் திருமண் இடுவதே கிடையாது; கோயிலுக்குப் போவதில்லை; எப்பொழுதும் கூத்தும் பாட்டுமாகவே இருக்கின்றான். அவன் சீமைக்குப் போய் வந்தபிறகு அவன் நடத்தை சரியாக இல்லையென்றும் கேள்விப் பட்டேன்.

கமலம்:—யாரோ உம்மிடம் பொய் சொல்லியிருக்கிறார்கள்.

ரகு:—உனக்கு எல்லாம் தெரியுமோ?

கோதை:—கமலம்! பதுதான் சொல்லுகிறானே, நீ சும்மாயிரு.

பது:—அப்பா! நீர் சொல்வ தெல்லாம் தவறு. யாரோ உம் மிடம் அவனைப் பற்றிக் கோள் சொல்லி, உமது மனதைக் கெடுத் திருக்கிறார்கள். அவன் லௌகிகனா யிருப்பினும், அந்தரங்க மாக பக்தி யுடையவன், நல் நடத்தை யுடன் கூடியவன். இந்த யோகி எப்படி மேலுக்கு பக்தி யுள்ளவர் போல் நடிக்கிறாரோ, அதே மாதிரி அவன் மேலுக்கு லௌகிகனாக நடிக்கிறான். அவனுடைய குணத்தில் ஆயிரத்திலொரு பங்காவது இந்த யோகிக் கிருந்தால், கமலத்தை யோகிக்குக் கொடுப்பதற்கு நான் சம்மதிப்பேன்.

ரகு:—(கோபத்துடன்) நீ இவ்வளவு தூரம் யோகிகளைப் பற்றி இழித்துப் பேசப் பேச, அவருக்கேதான் கமலத்தைக் கொடுக்க வேண்டு மென்று எனக்குத் தீர்மானம் அதிக மாகிறது. அப்படியே எனக் கிஷ்டமானவருக்கு என் பெண்ணைக் கல்லியாணம் செய்து கொடுக்கும் உரிமை எனக் கிருக்கிற தென்றறியுங்கள். என் னிஷ்டப்படித்தான் செய்யப் போகிறேன்.

கமலம்:—(அழுதுகொண்டு) அப்பா! அப்பா! தாயை இழந்தது முதல் உம்மையே தந்தை யாகவும் தாயாகவும் எண்ணியதற்கு நீர் இவ் விதம் செய்ய லாமா? எனக்கு இஷ்ட மானவரைக் கல்லியாணம் செய்து கொண்டா லன்றி, இந்த யோகியைக் கல்லியாணம் செய்து கொள்ள வேண்டு மென்று நீர் நிர்பந்தித்தால், நான் கட்டாயம் உயிர் விடுவேன்.

ரகு:—நான் சொல்வதைக் கேட்காத பெண் இருப்பதை விட இறப்பதே நலம்.

கமலம்:—அப்படி யானால், நீர் உம் மிஷ்டப்படி என் மணத்துக் காக ஏற்பாடு செய்வீராயின், என் பிணத்தைத் தான் நீர் பார்க்கலாம். (அழுதுகொண்டே இடது புறம் போகிறாள்.)

ரகு:—(அவள் போகும் திசையைப் பார்த்து நின்று, பெரு மூச்சு விட்டு, கோபத்துடன்) போக்கிரிக் குட்டி! துஷ்டை!

பது:—சின்னம்மா, நீங்களாவது சொல்ல லாகாதா அப்பாவிடம்?

கோதை:—(கணவரைப் பார்த்து) நீங்கள் கொஞ்சம் நிதானித்து யோசித்துச் செய்ய லாகாதா?— கமலத்தைக் கட்டாயப் படுத்தினால், அவள் ஒரு வேளை ஆற்றிலோ கிணற்றிலோ

விழுந்து பிராணனை விட்டால், நமக் கல்லவோ கஷ்டமும் அவமானமும்?—என்னுடைய கல்யாணத்திற்கு முன்பாக நானும் எவ்வளவோ தடவை எங்காவது விழுந்து பிராணனை விட்டு விடலாமா வென்று நினைத்தேன்.—

ரகு:—(கோபத்துடன்) நீயும் அவர்களுடன் சேருகிருயா?

பது:—சின்னம்மா நியாயத்தைதானே சொல்லுகிறுர்.

கோதை:—பெண்கள் தங்களுக் கிஷ்டமானவரைக் கல்யாணம் செய்து கொள்ளுவது தான் நலம். இல்லாவிடில்—

ரகு:—இல்லாவிடில் என்ன?

கோதை:—அவளுக்கும் எல்லோருக்கும் கஷ்டந்தான்.—கமலமாவது சுகமா யிருக்கட்டுமே!

பது:—அப்பா! என் மீது எவ்வளவு வேண்டு மானுலும் கோபித்துக் கொள்ளும்; கமலத்தை மட்டிலும் கல்யாண விஷயத்தில் கட்டாயப் படுத்த வேண்டாம்.

ரகு:—(சற்று யோசித்து நின்று) உங்கள் எல்லோருக்கும் இப்பொழுது புத்தி சரியா யில்லை. நான் சென்று ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைப் பூஜித்து உங்களுக்கு நற் புத்தி அளிக்கும்படி அவரை வேண்டுகின்றேன். (வலது புறம் வேகமாகப் போகிறுர்.)

கோதை:—(தன் புருஷன் மறையும் வரையில் அவரைப் பார்த்துக் கொண்டு நின்று, பிறகு, முக மலர்ச்சி யுடன் பதுவைப் பார்த்து) பது! நீ சொல்லியது எல்லாம் சரிதான். உன்னைப் போல் சிறியவர்க ளுடைய மனம் அப்படித்தா னிருக்கும். ஆனுல், அவர் வயதானவர் தானே. அவருக்குக் கோபம் வரும்படி செய்யலாமா?

பது:—கமலாவின் எண்ணம் உங்களுக்குத் தெரியாதா?

கோதை:—தெரியாம லென்ன? (வருத்தத்துடன்) என் எண்ணம் எப்படி யிருந்ததோ அப்படித் தானே இருக்கும். நான் இப்பொழுது வயதானவரைக் கல்யாணம் செய்து கொண்டு வருந்துவது போல், அவளுக் கிஷ்ட மில்லாதவரை அவள் மணந்து மனம் நோவா னேன்?

பது:—இந்த விஷயத்தில் நீங்கள் தான் உதவ வேண்டும். எப்படி யாவது அப்பா விடம் சொல்லி, அவர் மனதைத் திருப்ப வேண்டும்.

கோதை:—அப்படியே ஆகட்டும். கமலத்திற் காக இல்லா விட்டாலும், உனக் காகவும், நானிருக்கும் ஸ்திதியை நினைத்தும், கட்டாயம் அவ ளிஷ்டப்படியே அவள் அனந் தய்யங்காரை மணம் செய்து கொள்வதற்கு நான் என்னா லான உதவியைச் செய்கிறேன்.—

பது:—(சந்தோஷத்துடன்) அது போதும், அம்மா! உங்களுக்கு மிகவும் புண்ணியம்!—

கோதை:—ஆனால், இது நம் மிருவருக்குள் மாத்திரம் ரஹஸ்யமா யிருக்கட்டும்.

பது:—கமலத்திற்கு மாத்திரம் சொல்லு கின்றேன்.

கோதை:—ஸரி, உன்னிஷ்டம்.

பது:—கமலம் கவலைப் பட்டுக் கொண் டிருப்பாள். நான் போய் அவளுக்குத் தேறுதல் சொல்லு கின்றேன்.
(சந்தோஷமாய் இடது புறம் வேகமாய்ப் போகிறான்).

கோதை:—(போகிறவனைப் பார்த்து நின்று, பெரு மூச்சு விட்டு, ஏங்கித் தலை யசைத்து, வலது புறம் திரும்பிப் பார்த்து வருத்தத்துடன்) என் தலை விதியை நினைக்கும் போதெல்லாம் எனக் குண்டாகும் வருத்தத்திற்கு அளவே யில்லை. கமலத்தின் விஷயத்தைக் கேட்கும் பொழுது என் துக்கம் மட்டுக் கடங்காமல் மேலிடுகிறது. எப்பொழுது தான் என் கவலை தீருமோ? என் ஸர்வ ஸௌக்கியங்களுக்கும் காரணமா யிருக்கும்படியான லக்ஷ்மி பிராட்டியே எனக்
S. கருள் புரிவாளாக! (லக்ஷ்மியை ஸ்தோத்தரித்துப் பாடிக் கொண்டே வலது புறம் போகிறாள்).

அங்கம் 2.

காட்சி 1.

[தெரு:—முன் காட்சிக்கு மறு தினம், மாலை 5 மணி:— சிவராம கனபாடிகள் இடது புறத்தி லிருந்தும், கோவிந்தா சாரியார் வலது புறத்தி லிருந்தும், வந்து சந்தித்து, ஒருவரை யொருவர் கை கூப்புகிறார்கள்.]

கோவி:—கனபாடிகளே! வாருங்கள், வாருங்கள். என்ன சமா சாரம்? என்ன விசேஷம்?

சிவ:—நான் வந்து இந்தப் பக்கம் தான் போகிறேன். தேவாள் எங்கே போகிறதோ?

கோவி:—அடியேன் இருந்துண்டு ஸாயங்கால மாயிற்றே இப்படி வந்து ஸந்தியா வந்தனம் செய்வதற்கு புஷ்கரணிக்குப் போய் அங்கிருந்து பஜனைக்கு வரலா மென்று போகிறேன்.

சிவ:—மிகவும் சந்தோஷம். தேவாள் பக்தியும் சிரத்தையும் ஞானமும் நினைக்க நினைக்க அதி அற்புதமாய் இருக்கின்றன. அவ்விடத்திய சாஸ்திர ஞானத்தைப் பற்றி ஊரா ரெல்லாம் வாய் மூடாமல் பேசுகிறார்கள்.— நான் சொல்கிறது புரிஞ்சுதா?— தேவாள் உபந்யாஸங்களைக் கேட்டுக் கேட்டு ஜனங்கள் புளகாங்கித மாகிறார்கள்.

கோவி:—கனபாடிகளே! அடியேன் வந்து ஒரு பதர் மாதிரி. உலகத்தில் பகவா னுடைய சேஷ பூதரான மஹான்க ளெல்லாம் இருக்கையில் நானிருந்துண்டு எந்த மூலை? ஏதோ அடியேன் கிரஹித்த சில விஷயங்களை பகவத் கைங்கரிய மாகச் சொல்லுகிறேன். நாம் செய்வ தெல்லாம் வந்து அவருடைய கைங்கர்யமும் அவருடைய ப்ரீத்யர்த்தமும் தானே!—இப்பொழுது தாங்கள் வேதாத்யயனம் செய்து ஸாம கானம் செய்யும் போதும் கனம் சொல்லும் போதும் எல்லோரும் வந்து தேவதைகளும் ருஷிகளும் கானம் செய்வது போல் நினைத்து ஆனந்திப்பதை நானிருந்துண்டு பார்த் திருக்கிறேனே!

சிவ:—எல்லாம் பெரியவர்கள் வம்சத்தில் நாம் பிறந்ததின் பலன்.—அர்த்த மாச்சா?— நமக்காக ஒரு யோக்கியதையு மில்லை. பெருங்காயம் வைத்த குடுக்கை மாதிரி, நம் மிடத்திலும் கொஞ்சம் மணம் உண்டாகின்றது.— நான் சொல்கிறது புரிஞ்சுதா?

கோவி:—அப்படி பெரிய வம்சத்தில் பிறப்பதற்கும் நாம் பூர்வ ஜன்மத்தில் புண்ணியம் செய் திருக்க வேண்டாமா? ஸ்ரீ கீதா சாரியர் வந்து, ஒரு பக்தன் கொஞ்சம் நழுவினாலும், அவன், அடுத்த ஜன்மத்தில், மேல் பதவியை அடைவதற்கு அநு குணமான வம்சத்தில் பிறப்பிக்கப் படுகிறான் என்று சொல்லி யிருக்கிறாரே!

சிவ:—தேவாள் அன்று உபந்யாஸம் செய்த போது, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா "நமே பக்தா: ப்ரணச்யதி" என்று சொல்லிய வார்த்தைகளைப் பற்றி விஸ்தாரமாக எடுத் துரைத்த போது மாத்திரம், என் மனதில் கொஞ்சம் சுருக் கென்றது.— நான் சொல்கிறது புரிஞ்சுதா?— எவ்வளவோ பாபம் செய்கிறோமே என்று மனதில் தைத்தது. ஆனால், நாம் பஜனை செய்வதால், நமக்கு ஒரு கெடுதலும் வரா தென்று தைரியமும் உடனே பிறந்தது.—

(இடது புறத்தி லிருந்து ராம கிருஷ்ண தாஸரி வந்து, தரையில் விழுந்து, இருவர்களையும் நமஸ்காரம் செய்து எழ, அவர்கள் தங்கள் இடது கையை மாத்திரம் நாபியின் மீது வைத்துக் கொண்டு தாஸரியைப் பார்த்து முறுவல் செய் கிறார்கள்).

கோவி:—தாஸரே! இதற்குள் ளாகவா புறப்பட்டீர் பஜனைக்கு?

தாஸரி:—ஸ்வாமிகளே! அடியேன் புஷ்பத் தோட்டத்துக்குப் போய், திருத் தொளாயும் புஷ்பமும் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு, பஜனைக்கு வருவதாகப் புறப்பட்டேன். தேவரீர் களும் அங்கே சீக்கிரம் வந்து சேருவீர்க ளல்லவா?

சிவ:—ஆஹா.—இன்று யாருடைய உபயம்?—தாஸரே! உமக்குத் தெரியுமோ?

தாஸரி:—இன்றைக்கு மேலத் தெரு மளிகை வியாபாரம் பங்காரு செட்டியார் உபயமா யிருக்கும்.—உங்களுக் கல்லவா சொல்லு கிறேன்—அந்த செட்டியார் அதிகமாகச் செலவு செய்வார்.

சிவ:—செட்டியார் உபயமா யிருந்தால், ப்ரஸாதங்கள் நன்ரு யிருக்கும்; மளிகையைத் திருப்பிவிட வேண்டியது தானே?

கோவி:—நான் என்னமோ—சாஸ்திரிகள் உபயம் என்று கேள்விப் பட்டேனே.—அவரே வருகிருர்.—

(கல்யாணராம சாஸ்திரியார், போலீஸ் உடை யுடன், இடது புறம் வந்து, சற்று தூரத்திலேயே இவர்களைக் கண்டதால், ஸைகிலி னின்று இறங்கி, அதைக் கையில் பிடித்துக் கொண்டுவந்து நின்று, தன் மீது அதைச் சாய்த்துக் கொண்டு, இரு கைகளாலும் அவர்க ளெல்லோ ருக்கும் வந்தனம் செய்கிருர். மற்ற மூவரும் பதில் வந்தனம் செய்கிருர்கள்.)

சிவ:—சாஸ்திரிகளே! எப்போதும் இந்த உடை யுடனேயே இருக்க வேண்டுமோ? ஸாயங்கால மாயிற்றே, ஸந்தியா வந்தனம் முதலியன செய்து விட்டு, பஜனைக்கு வர வேண்டாமா?

கோவி.—சாஸ்திரிகளே! மோக்ஷத்திலே கூட போலீஸ் உண்டோ?

கல்யா:—தேவாளுக் கல்லவா தெரியும்.

கோவி:—இல்லை. நீர் வந்து மோக்ஷத்திற்குப் போனாலும், தரும புத்திரர் நாயை இழுத்துக் கொண்டு போன மாதிரி, நீரிருந்துண்டு இந்த உடை யுடன் தான் வருவேன் என்று சொல்லுவீர் போ லிருக்கிறது. (சாஸ்திரியைத் தவிற மற்ற வர்கள் நகைக்கிருர்கள்).

கல்யா:—ஏதோ எங்கள் தொழிலின் கருமம். எந்தச் சமயத்தில் எங்கே போக வேண்டி யிருக்குமோ என்று எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டி யிருக்கிறது.

தாஸரி:—(கோவிந்தாசாரியாரையும் கனபாடிகளையும் பார்த்து) உங்களுக் கல்லவா சொல்கிறேன்—நம்ம சப் இன்ஸ்பெக்டர் வாள் ஊருக்கு வந்தது முதல், திருடர்களுக்குத் தொழிலே

போய் விட்டது. அதுவும், இவாள் பஜனைக்கு வர ஆரம்பித்தது முதல், எல்லோருக்கும் இவரிடம் பயம் அதிகமாச்சுது.—

(வலது புறத்திலிருந்து, பதுமநாபன், ஸைகிலினின்று இறங்கி, அதைத் தள்ளிக் கொண்டு, (suit) ஸூட் தரித்து, (coat) கோட்டின் இடது (pocket) பாகெட்டில் (stethoscope) ஸ்டெதாஸ்கோப் வெளியில் தெரியும் படியாக வைத்துக் கொண்டு, வந்து, வலது கையால் எல்லோருக்கும் ஸலாம் செய்கிறான். கல்யாணராம சாஸ்திரி பதில் ஸலாம் செய்கிறார்; தாஸரி கை கூப்புகிறான்; மற்றிருவரும் வலது கையை மார்பின் மேல் வைத்துக் கொண்டு, முறுவல் செய்கிறார்கள். இடது புறத்திலிருந்து மனத்துணை நாயக்கர் வந்து, சற்று தூரத்தில் நின்று, இவர்களைப் பரிஹாஸச் சிரிப்புடன் பார்த்த வண்ணம் நிற்கிறார்).

பது:—சாஸ்திரிகளே! கடைத் தெருவில் ஒரு பெரிய (accident) ஆக்ஸிடெண்டு. ஒரு (motor-car) மோடார் கார் ஒரு குழந்தை மேல் ஏறிற்று. அந்தக் குழந்தைக்கு வேண்டிய சிகிச்சை யெல்லாம் செய்து, ஆஸ்பத்திரியில் விட்டு விட்டு வருகிறேன். தங்களுக்குத் தகவல் வர வில்லையா?

கல்யா:—அங்கே (duty constable) டியூடி கான்ஸ்டபில் இருந்தானோ இல்லையோ?

பது:—அவன் சற்று தூரத்தில் வெற்றிலைக் கடையில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டு பேசிக் கொண்டிருந்தான். நாங்கள் எல்லாம் கவனித்த பிறகு, வெகு வேகமாக வந்து, எங்களை யெல்லாம் விசாரிக்க ஆரம்பித்து, மோடார் கார் நம்பரை நாங்கள் கவனிக்க வில்லை யென்று எங்களைக் கோபித்தான்.

கோவி:—வந்து—குழந்தை உயிருக்கு ஏதாவது அபாய முண்டோ?

பது:—அதிகமாக அடி படவில்லை.

கல்யா:—அப்போதைக்கு—நான் போய்—(case) கேஸை (register) ரிஜிஸ்டர் செய்ய வேண்டும். (வலது புறம் போயப் புறப்படுகிறார்).

சிவ:—இன்று ராத்திரி பஜனைக்கு தங்கள் உதயம்தானே?

கல்யா:— ஆமாம். (சொல்லிக்கொண்டே ஸைகிலைத் தள்ளிக் கொண்டு வலதுபுறம் போகிறார்).

பது:— நானும் போகட்டுமா? (இடது புறம் போகப் புறப்படு கிறான்.)

கோவி:—பத்மனுபா! கொஞ்சம் இரு; உன்னிடம் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும்.

பது:—என்ன?

கோவி:—உன் தகப்பனார் இருந்துண்டு எவ்வளவு பக்தி சிரத்தை யோடு பஜனை செய்து வருகிறார். அப்படி யிருக்க, நீ மாத் திரம் இப்படி இருக்கலாமா?

சிவ:—(பதுமனுபன் சும்மா யிருப்பதைக் கண்டு) சின்ன ஸ்வாமி களே! பிள்ளைகளுக்குத் தந்தையைக் காட்டிலும் மேலான வர்கள் யாரிருக்கிறார்கள்?—நான் சொல்லுகிறது புரிஞ்சுதா?—அவர் மாதிரியே நீயும் இருக்க வேண்டாமோ?

(இந்த வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டே மனத்துணை நாயக்கர் நெருங்கி வருகிறார்.)

பது:—அவர் வழி அது; என் வழி வேறு.

மன:—உலகில் ஒருவ ரிருக்கும் விதமே இன் னொருவர் இருப்ப தில்லை யென்று தாங்கள் அறியாததோ? அதாவது—அவ் வவர் வழி செவ் வழி யாகும்.

கோவி:—நாயக்கரே! உங்களை யார் கூப்பிட்டது?

மன:— பொதுப் பாதை யாகிற இதுவும் பிராம்மணர் களுக் கென்று உரித்தாயதோ? வீதியின் நடுவில் நின்று பேசினால் அதில் எல்லோரும் கலந்து கொள்ள உரிமை யுள்ளது.—அதிருக்கட்டும்; உங்கள் சாத்திரங்களி லேயே ஒவ்வொரு ஆன்மாவிற்கும் தனித் தனி யான முறை கூறி யுள்ளது என்று நீங்களே சொற் பொழிவு செய்யக் கேட்டிருக் கிறேன்.—அதாவது, ஞானம், அன்பு, கருமம் என்ற மும் முறை உண்டு என நீங்கள் கூறி யுள்ளீர். அது உண்மை யில்லா திருந்தும், அதன் படியே யாகிலும், அவரவர் தத்தம் வழி ஒழுகுவதில் குறை கூறுவதற்கு வழி யில்லை.

சிவ:—மும் மார்க்கம் எப்படி தவருகும்? அதன் படியும், இவருடைய செய்கை எப்படி சரியாகும்?

மன:—உலகில் ஒருவர் வழி ஒருவ ரில்லை.—அதாவது—மனிதர்களைப் பாகு படுத்தினால், மூவ் வகுப்பினர் தான் என்பது உண்மைக்கு மாருனது. நீங்கள் சொல்லும் விதமே மூவ்வழியாயினும், கருமமென்பதும் அதில் ஒன்ருயுளதால், நீங்கள் சொல்லியது தவருகும். அதாவது, டாக்டரவர்கள் தொழிலாளி யாவதால், அவரைத் தாங்கள் குற்றம் கூறுவதற் கிடமில்லை.

பது:—நானும் அதைத்தான் சொல்ல வந்தேன். உலகில் எல்லாக் கருமமும் பகவா னுடையது. அவருடைய கைங்கரிய மாக, அவருடைய ப்ரதி நிதியாக, அவருடைய ச்ருஷ்டிக்கு உதவியாக, எத் தொழிலையும் புரிந்தால், அதுவே மத அனுஷ்டானம், அதுவே பக்தி. அது இல்லாது, வாயினால் சில வார்த்தைகளைக் கூறி விட்டு, ஆடிப் பாடிக் கூத்தாடி, மனதில் சிறிதேனும் அவருடைய ஜீவராசிக ளிடத்து அன்பும் தயவுமில்லா திருந்தால், அது வீணே.

மன:—நான் கடவுள் இருக்கிருர் என்பதை மறுதளிக் காலும், அவருடைய தொண்டாக எல்லாம் புரிய வேண்டும் என்பதை கிராகரித் தாலும், சாத்திரத்தில் கருமமும் ஒரு வீடுமுறை என்று இருப்பதாகச் சொல்வதை நான் நம்பா விடினும், ஒவ் வொருவரும் தத்தம் மனப் போக்கின் படி ஒழுகலாமென்பது என் போன்ற சுய மரியாதைக் காரர்கள் கொள்கையெனத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

கோவி:—நாயக்கரே! சுய மரியாதை என்ருல் மற்றதை அவமரியாதை செய்ய வேண்டுமோ?— நீங்கள் வந்து கடவுள் இல்லை யென்று வெளிக்கு மாத்திரம் சொல்லிக் கொண்டு, அதன் படி உண்மையில் நடவாதது சுய மரியாதையாகுமோ?

மன:—எங்கள் சுய மரியாதைக்கு என்ன இழுக்கு உற்றது? அதாவது, எம் முறையில் எங்கள் கொள்கைக்குத் தவறி நடக்கிருேம்?

பது:—ஐயா, நாயக்கரே! உங்கள் வீட்டில் யாருக்காவது வியாதி வந்தால், என் போன்ற டாக்டர்களைக் கூப்பிடுவதுடன், ரஹஸ்ய மாக நீங்கள் கடவுளுக்கு வேண்டிக் கொள்வ தில்லையா?

கோவி:—பது! நன்றாய் ஞாபகப் படுத்தினாய்! முன் வருஷம் நாயக்க ரவர்களே தன் ஸம்ஸாரத்தையும் பிள்ளையையும் அழைத்துக் கொண்டு திருப்பதிக்குச் சென்று மொட்டை யடித்துக் கொண்டு வந்தாரே! (நாயக்கர் தவிற மற்றவர்கள் நகைக்கிறார்கள்).

சிவ:—ஏன்! இவருடைய ஸம்ஸாரம் சிவன் கோயில் நவக்ரஹ ஸந்நிதியில் ஒரு நாளைக்கு 108 பிரதக்ஷிணம் செய்கிறாள்.

தாஸரி:—எங்கள் பக்கத்து வீட்டில் இருக்கும் ஒரு பூசாரி இவர்கள் வீட்டுக்குப் போய் விபூதி போட்டு வந்தான்.

மன:—நீங்கள் சொல்வது என் மீது குற்ற மாகில், உங்கள் நடத்தை மாத்திரம் வெகு ஒழுங்காய் இருக்கின்றதோ?—உங்களில் சிலர் கட் குடித்தலும் விலை மாதரை அணுகுவதும் செய்ய வில்லையோ?

சிவ:—நாயக்கரே!—

கோவி:—நாயக்கரே! கடவுள் இருக்கிறார் என்றும், புண்ணியம் பாவம் என்று உண்டு என்றும், நம்புவதால், நாங்கள் இருந் தும் கொஞ்சமாவது ஒரு ஹத்துக்கு உள் ளடங்கி யிருக் கிறோம். தங்களைப் போன்ற சுய மரியாதைக் காரர்களுக்கு ஒரு வரம்பும் இல்லாததால், உங்களில் சிலர் இருந்துண்டு செய்யும் அகிருத்தியங்களுக்கு அளவே யில்லையே!

சிவ:—எது எப்படி யானாலும், நீர் நேரில் பார்க்காமல் ஒன்றும் சொல்ல லாகாது.

கோவி:—அதிருக்கட்டும்—நீரிருந்துண்டு இன்றைய தினம் ராத்திரி எங்கள் பஜனைக்கு வந்து பாரும். அப் பொழுது உமக்கே நிஜமான பக்தி யுண்டாகும்.

சிவ:—நாயக்கர்! எதையும் அநுபவித்துப் பார்த்தால் தான் அதனுடைய நன்மையோ, தீமையோ தெரியும்.—அர்த்தமாச்சா?—நீர் இன்றைக்கு அவசியம் வந்து பாரும்.—இன்றைய தினம் நமது சப் இன்ஸ்பெக்டர் கல்யாண ராம சாஸ்திரிகள் உபயம்—வெகு விமரிசையாய் நடக்கும்.

கோவி:—(நாயக்கர் யோசிப்பதைப் பார்த்து) சாஸ்திரிகள் அதிக செலவழித்து, அநேக சாமான்கள் அனுப்புகிருர், இன்றைய நைவேத்தியத்திற்கு.

தாஸரி:—ப்ரஸாதம் வெகு நன்ருயிருக்கும்.

மன:—அப்படி யாளுல் வருகிறேன்.

கோவி:—(பதுமனுபன் சிரித்துக்கொண் டிருப்பதைப் பார்த்து) பது! என்ன சிரிக்கிருய்?

பது:—ஒன்று மில்லை;— இன்றைக்கு சாஸ்திரியார் உபய மென்று சொன்னீர்களே!—

சிவ:—ஆமாம்; அதனு லென்ன?

பது:—பசுவைக் கொன்று செருப்பு தானம் செய்வது போல், சாஸ்திரிகள் யார் தலையில் கை வைத்தாரோ?

கோவி:—(காதைப் பொற்றிக் கொண்டு) கிருஷ்ணா! கிருஷ்ணா!

சிவ:—இதெல்லாம் நமக் கெதற்கு? விசுவாசத்துடன் அவர் நடத்தினுல், அவருக்கு எப்படி பணம் வருகிற தென்பதைப் பற்றி நாம் கவலைப் படுவானேன்?

பது:—லஞ்சம் வாங்குபவனும், பொய் சொல்லுபவனும், திருடுபவனும், என்ன பூஜை செய்தாலும், அவன் எப்படி பக்த னுவான்?

மன:—கடவுள் உண்மையில் இருந்தால், இவர்கள் இப்படிச் செய்வார்களா?

கோவி:—அரசன் அன்று கேட்பான், தெய்வம் நின்று கேட்கும்.— அதிருக்கட்டும், பது! நீ மாத்திரம் வியாதிஸ்தர்கள் பிழைப்பார்க ளென்று சொல்லிக் கொண்டே அவர்களை ஏமாற்றிப் பிழைக்க வில்லையா?

பது:—அவர்கள் பிழைக்க மாட்டார்க ளென்று சொன்னால், அவர்களுடைய மரணத்தை துரிதப் படுத்துவ தாகும். ஆதலால், பிழைப்பதாகக் கூறுதல் அதர்மம் ஆகவே ஆகாது.

சிவ:—ஆகையால், தொழில் முறையில், திரவியம் சம்பாதிப்ப தற்காக, எது செய்தாலும் அது தருமமே.

மன:—இதுதான் தருமம், இது தான் தரும மில்லை யென்பது பார்ப்பனர்கள் தங்களுக்குத் தகுந்தபடி ஏற்படுத்திக் கொண்ட விதிகளின் படி யுள்ளதாலும், மற்ற சாதியர் களைக் கலந்து கொண்டு ஏற்படுத்தாத தாலும், உண்மையில் தரும சாத்திரங்க ளென்பவை கவனிக்கப் பாலன வல்ல.— உங்கள் சாத்திரங்களின்படி, தொழிலில் என்ன அட்டூழியம் செய்து பணம் சேகரித்தாலும் தரும மாகுமோ?

கோவி:—அப்படி யல்ல;— சம்பாதிக்கும் பணத்தில் ஏதோ ஒரு பாகம் கடவுள் வழிபாட்டிற்கும், பிராம்மண போஜனத் திற்கும், சத்திரங்கள் முதலிய தருமத்திற்கும், செலவழித் தால், சம்பாத்தியம் தரும மான தாகும்.

தாஸரி:—அற்காகத்தான் கொள்ளைக் கூட்டத்தார்களும், திருடர் களுங் கூட, சேகரித்த பொருள்களில், ஆறில் ஒரு பங்காவது திருப்பதியில் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் உண்டியில் கொண்டு வந்து சேர்க்கிறார்கள்.

பது:—அப்படி யானால், எது வேண்டு மானாலும் செய்யலாம் போலிருக்கிறது? (நகைக்கிறான்.)

மன:—சம்பாதிப்பதில் எவ்வளவு பங்கு இப்படிச் செலவழிக்க வேண்டு மென்று உங்கள் சாத்திரங்கள் கூறுகின்றன?

கோவி:—அரசனுக்கும் அரசர்க் கரசனான பகவானுக்கும் உரியது ஆறில் ஒன்று.

மன:—பிராம்மணர்களுக்குக் கொடுத்தால் தான் தருமமோ? ஏழை பரதேசிக ளாகிய பிராம்மண ரல்லாதார்க்கு, உண வளித்தாலும், வேறு ஏதாவது உதவி செய்தாலும், அது தரும மாகாதோ?

சிவ:—எது தருமம் எது தரும மில்லை யென்று சாஸ்திரப் படித்தானே நாங்கள் சொல்ல வேண்டும்.

பது:—சூத்திரர்க ளாயினும், யாராயினும், கடவுள் ச்ருஷ்டி யானதால், யாருக் குதவி செய்தாலும் கடவுளுக்குக் கைங்கரியமாகும்.

மன:—அப்படிச் சொல்லுங்கள்! எங்க ளிட மிருந்து மாத்திரம் வாங்கிக் கொள்ளலாம்; எங்களுக்குக் கொடுக்க லாகாதோ?

பது:—இது என் வீண் சச்சரவு?—எனக்கு வேலை யிருக்கின்றது; நான் போகிறேன். (இடது புறம் சைகிலைத் தள்ளிக் கொண்டு போகிறான்).

கோவி:—(போகிறவனைப் பார்த்து நின்று, பெரு மூச்சு விட்டு) இப்படியும் குலத்திற்குக் கோடலி ஒன் றிருக்குமா?

சிவ:—நாயக்கரே! நீங்கள் இன்று தவறாமல் பஜனைக்கு வாருங்கள்.

மன:—(சற்று யோசித்து) ஆகட்டும், வருகிறேன். (வலது புறம் போகிறார்).

தாஸரி:—அடியேனும் வருகிறேன்; புஸ்பம் தொளசி எடுக்கப் போக வேண்டும். (கை கூப்பி விட்டு வலது புறம் போகிறான்).

கோவி:—(சற்றுப் பொறுத்து, நாலாபுறமும் பார்த்து விட்டு, தாழ்ந்த குரலில்) நம்மைப் பரிஹாஸம் செய்யும் இந்த நாயக்கரை நாம் வந்து சும்மா விடலாகாது. அவன் கையைக் கொண்டே அவன் கண்ணைக் குத்த வேண்டும்.

சிவ:—அதுதான் சரி. நம் வலையில் இன்று அவன் அகப்பட்டுக் கொண்டான். அவனுக்கு நிறைய பண மிருக்கின்றது. ஒரு நாள் உபயம் அவனைச் செய்யும் படியாக நாம் ஏற்பாடு செய்யலாம்.

கோவி:—சரி; இருட்டுகின்றது; நாம் போவோம். பஜனை யான பிறகு—ராத்திரி—நம் மிடத்திற்கு—சேர்ந்து போவோம்.

சிவ: —அப்படியே.

(இருவரும் இடது புறம் போகிறார்கள்.)

அங்கம் 2.

காட்சி 2.

[பங்களாவில், தோட்டத்தின் முன் பாகம்; ஒரு சாய்வு பெஞ்சு (Garden back bench) போடப் பட்டிருக்கிறது.— முன் காட்சியின் மறு நாள் மாலை 5 மணி.—பெஞ்சின் மத்தியில் பதுமனுபனும், வலது புறத்தில் கமலமும், இடது புறத்தில் அனந்தய்யங்காரும் உட்கார்ந்து பேசிக் கொண்டு இருக்கிறார்கள்.]

பது:—(அனந்தனைப் பார்த்து) அனந்தா! நீ நினைப்பது சரியா யிருக்குமா?

அன:—நான் என்ன குழந்தையா? இது கூடவா தெரியாது? எப்படி இந்தத் தீர்மானத்திற்கு வந்தேன் என்று சொல்லு கிறேன் கேள்.

பது:—சரி.

அன:—இன்று காலை (District Magistrate) டிஸ்டிரிக்ட் மாஜிஸ் டிரேட் கோர்ட்டில் நான் ஒரு கேஸ் நடத்திக் கொண்டிருந் தேன். அப்பொழுது போலீஸ் ரிகார்டுகளைப் பரிசோதித்து நான் பேச வேண்டியதா யிருந்தது. அந்த ரிகார்டுகளில் ஒன்று மிகவும் பழயது. அதன் மத்தியில் (Criminal Intelligence Gazette) க்ரிமினல் இன்டெலிஜென்ஸ் கெஜெட்டின் பழய பிரதி யொன்று இருந்தது. அதைப் பிரித்துப் பார்க்கும் போது, அகஸ்மாத்தாய், அதிலிருக்கும் படம் ஒன்று என் கவனத்தை இழுத்தது. அதை நோக்கும் போது, நமது யோகியாரைப் போலவே இருந்தது; ஆனல், அதில் மீசையும் தாடியும் இல்லை. நான் உடனே அந்தப் பட மிருக்கும் பக்கத்தை மட்டும், கேட்டு விட்டு, கிழித்து எடுத்து வந்தேன்.—

கமலம்:—எங்கே அது?

அன:—அவசரப் பட வேண்டாம்; நான் சொல்லுகிறேன். வீட்டிற்கு வந்ததும், அதே மாதிரி யாக ஒரு காகிதத்தில் சித்திர மெழுதி, அந்தச் சித்திரத்தில் மீசையையும் தாடியை யும் சேர்த்தேன். அவ் விதம் செய்ததும்— அந்தச் சித்திரம் நமது யோகியா ருடைய தாகவே மாறியது!

பது:—அப்படியா?— அதை யாவது கொண்டு வந்திருக்கிருயா?

அன:—இரு; கொஞ்சம் பொறு. இரண்டையும் எடுத்துக்கொண்டு நான் உடனே நமது நண்பர் துரை ராஜ அய்ய ரிடம் காண்பிக்கலா மென்று போனேன்.—

கமலம்:—போலீஸா ரிடமா? அவர்க ளிடம் காண்பிக்க லாமோ?

பது:—கமலம்! நமது துரை ராஜய்யர் போலீஸ் (department) டிபார்ட்மென்டுக்கே ஒரு ரத்னம்! அவரைப் போல் ஸத்ய ஸந்தரையும், நற் குண முள்ளவரையும், தெய்வத்திற்குச் சம்மதமாய்ச் சரி வர வேலை செய்பவரையும் நாம் காண முடியாது. அவரை நாம் முழுதும் நம்பலாம்.—

அன:—அதற்காகத்தான் அவரிடம் எடுத்துச் சென்றேன். ஆனல் அவர் வீட்டி லில்லை. ஏதோ ஒரு கொள்ளைக் கூட்டத்தைப் பிடிப்பதற்காக, ஒரு வாரமாக, இரவும் பகலும், உணவும் உறக்கமு மின்றி, அலைந்து திரிகிருராம்.—

பது:—எங்கே அந்தக் காகிதங்கள்?

அன:—(தன்னுடைய கோட் உள் பாகெட்டி லிருந்து சித்திரங்களுள்ள ஒரு அச்சுக் காகிதத்தையும் ஒரு வெறும் காகிதத்தையும் எடுத்து பதுமனுப னிடம் கொடுத்துக் கொண்டே) இவைக ளிரண்டையும் பாருங்கள். (பதுமனுபனும் கமலமும் அந்த இரண்டு காகிதங்களையும் மாறி மாறிப் பார்த்து, ஒப்பிட்டு ஆச்சரியப் படுகிருர்கள்).

கமலம்:—அப்படியே யிருக்கிறதே!

பது:—துளி கூட வித்தியாசத்தைக் காணும்!

அன:—சரி!— அந்த (Gazette) கெஜெட்டு காகிதத்தில் எழுதி யிருப்பதைப் படித்துப் பார்.

பது:—(மௌனமாக, வரவர ஆச்சரியத்துடன், படித்துவிட்டு, அதைக் கமலத் திடம் கொடுத்துக்கொண்டே, கோபத்துடன்) கொலை செய்ததற்காகக் கடுங் காவலி லிருந்த காதகன் ஜெயிலி லிருந்து தப்பித்துக் கொண்டு வெளி வந்ததாக இதில் எழுதி யிருக்கிறதே!—.

கமலம்:—(அந்தக் காகிதத்தைப் பார்த்துக்கொண்டே)—என்ன ஆச்சரியம்!— இப்போதைக்கு ஐந்து வருஷங்க ளாகின் றனவே, இன்னமுமா போலீஸார் இதைக் கண்டு பிடிக்க முடியவில்லை? (காகிதங்களை அனந்தனிடம் கொடுக்கிருள்).

அன:—(காகிதங்களை பாகெட்டில் போட்டுக் கொண்டே, புன் சிரிப்புடன்) போலீஸாரா?

பது:—அந்த பாக்கியம் நமது துரைராஜய்யருக்கும் நமக்குந்தான் இருக்கிறது.

அன:—நாம் வெகு ஜாக்கிரதையாக இனி மேல் இந்தத் திருட்டு யோகியைக் கவனித்து வர வேண்டும். அவனுடைய நண் பர்கள் மீதும் ஒரு கண் இருக்க வேண்டும். நம்முடைய சந்தேகம் சரிதானு என்பதற்கு ஏதாவது புலன் அகப்பட்ட வுடன் நாம் துரைராஜ அய்யரிடம் சொல்லவேண்டும். அது வரையில், நாம் இந்த விஷயத்தை ஒருவரிடமும் சொல்லக் கூடாது.

கமலம்:— யோகியைப் பார்த்ததும், அண்ணு, கோபத்தால், ஏதா வது விஷயத்தை வெளி யிடாம லிருக்க வேண்டும்.

அன:—பது! ஜாக்கிரதை!

பது:—நான் அதெல்லாம் மிகவும் உஷாரா யிருப்பேன்.

அன:—(எழுந்து கொண்டே) சரி, வாருங்கள். நாம் சற்று உலாவப் போவோம்.

பது:—கமலம்! நீ போ. நான் இங்கேயே உட்கார்ந்து கொண்டு மேல் நடக்க வேண்டிய விஷயங்களைப் பற்றி யோசிக்க வேண்டும்.

கமலம்:—(எழுந்து) சரி.— ஆனல், ஜாக்கிரதை; ஏதாவது வெளி யில் தெரியப் போகிறது.

பது:—நீங்கள் ஸ்திரீகள் தான் கெஜெட்டுகள்.

அன:—(கமலம் கோபத்துடன் சொல்லப் போவதைத் தடுத்து) கமலம்! நீ வா; பதுவுக்கு ஒரு ஊமையைக் கல்லியாணம் செய்து வைப்போம். (இருவரும் சிரித்துக் கொண்டே இடதுபுறம் போகிருர்கள்.)

34699

பது:—(சற்றுப் பொறுத்து, யோசனையில் ஆழ்ந்தவண்ணம், தனக்குள்) அனந்தன் சந்தேகித்தபடி, உண்மையிலேயே இருந்தால்?—(பெருமூச்சு விட்டு)—எல்லா வற்றிற்கும் பகவானைத் தவிற வேறு கதி யில்லை. அவ ரருளால் எங்க ளெண்ணம் கைகூடும். இந்த அயோக்கிய யோகியின் தன்மையை உள்ளபடி வெளிப்படுத்தி, நாங்கள் மூவரும் இன்புற, துஷ்டர்களைச் சிக்ஷித்து சிஷ்டர்களை ரக்ஷித் தளிக்கும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாதான் கதி. (கை கூப்பித் தியானிக்கிறான்).

S.

(பது தியானித்துக் கொண் டிருக்கும் போது, கோதையம்மாள் மெல்ல வலது புறம் வருகிறாள்).

கோதை:—(பதுவை ஆவலுடனும் கவலையுடனும் பார்த்த வண்ணம் அசை வற்று நின்று, பெருமூச்சு விட்டு, பின்பு, மெல்ல அவன் பின்னால் சென்று நின்று கொண்டு, அவன் தியானம் முடிந்ததும்) பது! பது!

பது:—(திடுக்கிட் டெழுந்து, திரும்பிக்கொண்டே) கமலா!—அம்மா! நீங்களா?

கோதை:—பது! கமலாதானா உனக்கு வேண்டியவள்?

பது:—அம்மா! என்னைப் பெற்றெடுத்த தாயின் பின், தங்களையே என்னுடைய அன்பிற்கும் வணக்கத்துக்கும் தகுந்தவராக, நான் பாவித் திருக்கிறேன். சற்று முன்பு கமலா இவ்விடமிருந்து போனதால், அவள் தான் பின்னால் வந்து நிற்கிறாள் என்று நினைத்தேன்.

கோதை:—பது! அதிருக்கட்டும்; எதற்காகக் கவலை யுடன் கடவுளைத் துதித்துக் கொண் டிருந்தாய்?

பது:—அம்மா! இப்படி உட்காருங்கள், சொல்லுகிறேன்.

கோதை:—(பெஞ்சில், வலது புறத்தில், உட்கார்ந்து கொண்டு) நீயும் உட்கார்ந்துகொள்.

பது:—(பெஞ்சின் இடது புறத்தில், ஓரத்தில், உட்கார்ந்து கொண்டு) அம்மா! நம்முடைய கமலாவின் விவாகத்தைப் பற்றியே எனக்குக் கவலை அதிகமாக இருக்கிறது. வேறு இடையூறு ஒன்று மில்லாமல், அனந்தனுக்கும் அவளுக்கும், தங்கள் தயவாலும், கடவுள் அருளாலும், விவாகம் நடக்க வேண்டுமென்றே பகவானைத் துதித்தேன்.—

கோதை:—நான் உன்னிடம் முன்னமேயே சொல்லியபடி, என்னால் ஆன வரையில் அதற்கு உதவி செய்கிறேன்; ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும் அருள் புரியும்படி தியானிக்கிறேன்.—அதிருக்கட்டும்; பது! நீயும் சந்தோஷமா யிருக்க வேண்டாமா?—

பது:—கமலாவின் கல்லியாணம் நடந்து விட்டால், நான் சந்தோஷ மடைவேன்.

கோதை:—(சற்று யோசித்து, வருத்தத்துடன் பெருமூச்சு விட்டு, சிறிது பொறுத்து) உனக்கும் ஒரு கல்லியாணம் செய்து நாங்கள் பார்க்க வேண்டாமோ?

பது:—(சிரித்து) என் கல்லியாணத்தைப் பற்றி என்ன அவசரம்? கமலத்தின் விவாஹம் சரியாயும் நினைத்த படியும் முடிந்து விட்டால், என் கவலை யெல்லாம் தீர்ந்து விடும்.—(வலதுபுறம் யோகிகள் வருவதைக் கண்டு எழுந்திருக்க, கோதையும் எழுந்திருக்கிறாள்).—அம்மா! நான் வருகிறேன். (இடது புறம் வேகமாக, சற்று வெறுப்பும் கோபமும் கலந்த முகத்துடன், திரும்பித் திரும்பி பார்த்துக்கொண்டே, போகிறான்.)

(யோகிகள் வலது புறம் வருகிறார். கோதை யம்மாள் யோகியைப் பார்த்து கை கூப்புகிறாள்).

யோகி:—(வலது கையை உயர்த்தி ஆசீர்வதித்து, பெஞ்சில் இடது புறத்தில் உட்கார்ந்து கொண்டு) அம்மணி! ஏதோ விவாஹ விஷயமாகப் பேசிக் கொண் டிருந்தது நான் வந்ததால் தடை யாயிற்றோ?

கோதை:—(தலை குனிந்து கொண்டு, திருட்டுச் சிரிப்புடன்) அப்படி யொன்று மில்லை. தங்களுடைய தயவும் ஆசீர்வாதமு மில்லாமல் விவாஹம் எப்படி நடக்கும்?

யோகி:—யாருடைய விவாஹம்?

கோதை:—(கள்ளச் சிரிப்புடன்) கமலத்திற்கும் தங்களுக்குந்தான்.

யோகி:—(எழுந்திருந்து, கோதை யம்மாளுக்குச் சற்று அருகாமையில் வந்து நின்று) பெண்மணி! என் மனம் இந்த விவாஹத்தில் செல்ல வில்லை யென்று முன்பே தெரிவித்துக் கொண்டேன். என் மனதிற் குகந்த மிகவும் சுந்தரமும்

ரம்மியமும் பொருந்திய வஸ்து ஒன்று என் ஹ்ருதய கமலத்தில் எப்பொழுதும் இருக்க, நான் இந்தக் கமலத்தை நாடுவேனு?

(பதுமனுபன், இடது புறத்தில், மெல்ல முன் வந்து, செடிகளின் மறைவில் நிற்கிருன்).

கோதை:—ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா விடத்திலேயே தங்கள் மனம் எப்பொழுதும் ஈடுபட்டிருக்கிற தென்று எங்களுக்குத் தெரியாதா? ஆயினும்,—

யோகி:—ஸ்திரீ ரத்தினமே! நான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா விடம் பக்தி யுள்ளவ னுயினும், என் னுடைய ப்ரேமைக் குரிய வஸ்து என் கண் முன்னே யிருக்கும் பொழுது என் மனம் வேருெருவ ரிடம் செல்லுமோ? பெண்மணீ! கமலம் போல் முகமும், மானைப் பழித்த விழியும், விற் புருவமும், சகல அவயவங்களின் சௌந்தரியமும் லாவண்ணியமும் ஒருங்கு கூடி என் மனதைக் கொள்ளை கொண்டன;—(அவளுக் கருகில் முழந்தா ளிட்டு) என்னை யேற்றுக் கொண்டு, என்னையும் களிப் புறும் படிச் செய்து, நீயும் களிப் புறுவாய். (கோதை நகருவதைக் கண்டு, அவ ளுடைய முந்தானையைத் தொட்டு முத்த மிடுகிருர். பதுமனுபன், கோபத்துடன் சற்று வெளி வந்து, மறுபடியும் மறைகிருன்.)

கோதை:—(சற்று திடுக்கிட்டு, சிறிது கோபத்துடன் முகத்தை வலது புறம் திருப்பிக் கொண்டு) நன்ரு யிருக்கிறது நீர் சொல்லுவது.—விளையாடுகிறீரா, அல்லது, என்னைப் பரீக்ஷிக்கிறீரா?

யோகி:—(எழுந்திருந்து, அவளை நெருங்கி) கண்மணி! இல்லற இன்பம் இல்லாது நீ ஏங்கித் தவிப்பது எனக்குத் தெரியாதா? அவ் விதமே வாடி வதங்கும் என் னுடைய துன்பத்தையும் தீர்த்து, நீயும் இன்ப மடையுங் காலம் கிட்டியது. இனி தாமதிக்க லாகாது.—கண்மணி! (இரு கைகளையும் நீட்டி அவளை ஆலிங்கனம் செய்யப் போகிருர்).

கோதை:—(திடுக்கிட்டு, வெகுண்டு, வலதுபுறம் வேகமாக நகர்ந்து கொண்டே) ஐயோ!

பது:—(மறைவி லிருந்து இடது புறம் வேகமாக வெளியில் வந்து) அம்மா! பயப்பட வேண்டாம்.—நன்று யிருக்கிறது, யோகி யின் லக்ஷணம்!—உண்ட வீட்டிற்கு இரண்டு நினைக்கும் அயோக்யா! போ வெளியில்; இல்லாவிடில், உதைப்பேன். அப்பா விடம் இதைச் சொல்லி உன்னை என்ன பாடு படுத்து கிறேன் பார். உன் உண்மையைச் சீக்கிரம் வெளிப்படுத்து கிறேன் பார்.

யோகி:—(இடது புறம் நகர்ந்து நின்று, கோபத்துடன் பதும னுபனைப் பார்த்துப் பல்லைக் கடித்துக் கொண்டு) அடே பயலே! உன்னை விட்டேனு பார்! இன்னும் ஒரு நிமிஷத் திற்குள் உன்னை என்ன செய்கிறேன் பார்.—(கோபத்துடன் இடது புறம் வேகமாகப் போகிறார்).

பது:—சீ கெட்டாய் போடா!

கோதை:—பது! நல்ல வேளைக்கு நீ வந்தாய்.

பது:—அம்மா! நான், சந்தேகப் பட்டே, என்ன நடக்கிறது பார்ப்போ மென்று, செடி மறைவி லிருந்தேன். இந்த யோகியை, சோரனை, பிரமாதமாக நினைத்து மரியாதை செய்யும் அப்பாவிடம் நடந்த விஷயம் பூராவும் நாம் சொல்ல வேண்டும்.

கோதை:—பது! வேண்டாம். அவருக்கு இந்த விஷயமே தெரிய வேண்டாம். இனி மேல், நான் என்னைக் காப்பாற்றிக் கொள்வேன். இவ ருடைய சுபாவம் தெரிந்த பிறகு, நான் மிகவும் ஜாக்கிரதையாய் இருப்பேன். மேலும்,— நீ இருக்கும் போது, எனக்குக் குறை வென்ன?— பய மென்ன?— (இடது புறத்தில், காலடிச் சத்தமும் பேச்சு அரவமும் கேட்டு, உற்றுப் பார்த்து) பது! உங்கப்பாவும் அவரும் வருகிறார்கள்;— நான் போகிறேன்;— நீ ஒன்றும் சொல் லாதே. (வலதுபுறம் வேகமாகப் போகிறாள்).

பது:—(வலது புறம் நகர்ந்து, இடது புறம் நோக்கி நின்று, பெரு மூச்சு விட்டு) இது என்ன உலகம்!

(யோகிகளும் ரகுநாதய்யங்காரும் இடது புறம் வேகமாக வருகிறார்கள்.)

ரகு:—(வெகு கோபத்துடன் பதுமனுப னிடம் வந்து) துஷ்டா! என்ன செய்யப் பார்த்தாய்? ஸ்வாமிகள் வரா திருந்தால் என் னென்ன அநர்த்தம் நடந் திருக்கும்? தாய் என்றும் பாராத மிருகமே? பாவி! சண்டாளா!

பது:—அப்பா! இந்தக் கபட யோகியின் வார்த்தையைக் கேட்டு ஏதோ சொல்கிறீரே? இந்த அயோக்கியன், சண்டாளன், கொலை பாதகன், என் தாயை அணுகப் பார்த்ததை நான் தடுத்தது போக, என் மீது கோபிக்கிறீரே?

ரகு:—மூடடா வாயை! உளறுதே.

யோகி:—அவன் பேசட்டுமே; அவன் சொல்வதையும் நாம் கேட்க வேண்டும்.—(பதுமனுபனைப் பார்த்து) அப்பா, நீ சொல்.

பது:—(தந்தையைப் பார்த்து) அப்பா! நீர் இந்த யோகிக்கு இது வரையில் செய்த உபசாரத்திற்கும், காட்டிய மரியாதைக்கும், இவன் தக்க பிரதி யுபகாரம் செய்தான்.— உம் முடைய பத்தினியின் கற்பை அழிக்கத் துணிந்தானே இந்தப் பாபி! உடனே அவனைக் கசக்கிப் பிழிந்து கொன் றிருப்பேன்; உம்மை ஒரு வார்த்தை கேட்டு விட்டுச் செய்யலாம் என் றிருந்தேன். என் னுடைய சிற் றன்னையின் நற் குணத்தால், அவள் உம்மிடம் சொல்வதற்கு நாணிப் போய்விட்டாலும், உமக்கு நேர்ந்த கெடுதலை நான் உம் மிடம் கூற வேண்டி யிருக்கிறது.—

யோகி:—(பரிகாசமாகச் சிரிக்கிறார்).

ரகு:—அயோக்கியா! செய்த தீங்கையும் செய்து விட்டு, யோகியி னுடைய களங்க மற்ற தூய்மையை, உன் னுடைய பொய் வார்த்தைகளால், மங்கச் செய்யப் பார்க்கிறாயா?

பது:—இந்தக் கொலை பாதகனா தூயவன்? இவ னுடைய உண்மை யான சரித்திரம் சீக்கிரம் வெளிப் படும்.—

யோகி:—(ரகுநாதய்யங்காரைப் பார்த்து) ரகுவய்யங்கார்! அவன் சொல்வதையும் கவனியும். என்னை யேன் முழுவதும் நம்ப வேண்டும்? என் அந்தரங்கத்தைப் பற்றி உமக் கென்ன தெரியும்? உலகத்தார் என்னை நல்லவ னென் று நினைத்தாலும்

நான் ஒருகால் கெட்டவனாக இருக்கக் கூடாதா?— (பதுமனைப் பார்த்து) அப்பா! குழந்தாய்! நீ சொல்வதைச் சொல். என்னைப் பாதகனென்றும், காதகனென்றும், அதமனென்றும், சண்டாளனென்றும், திருடனென்றும், எது வேண்டுமானாலுஞ் சொல்; இன்னும் எவ்வளவு திட்ட வேண்டுமோ அவ்வளவு உன் மனமாறத் திட்டு; நான் ஒன்றும் தடை சொல்வதில்லை. எல்லாம் எனக்குரியனவோ வென்றும், எனக்கு வர வேண்டிய விதியோ வென்றும், பொறுத்துக் கொள்ளுகிறேன். மனம், வாக்கு, காயம் என்ற திரிகரணங்களில் எவற்றாலேனும் நான் செய்த பாபங்களுக்கு பிராயச்சித்த மாகும் நீ சொல்வது.

பது:—(பரிஹாஸத்துடன் சிரித்து) நீ செய்த கொலைக்கும் மற்ற பாபங்களுக்கும் பிராயச்சித்தமாக உன்னைச் சித்திர வதை செய்தாலும் போதாதே. இப்போது நீ செய்ய விருந்த தீச்செயலுக்கு உன்னைத் தீயி லிட்டு வாட்டினாலும் போதாதே. அயோக்யா! சாதகா! உன் உடலைப் புழுவிற் கிட்டாலும் பிராயச்சித்த மாகாதே!— ஐயோ! அப்பா! இந்தப் பாவியினுடைய வார்த்தைகள் உம்மை யிப்படி ஏமாறச் செய்ய வேண்டுமா?

ரகு:—வாயை மூடு! அயோக்யா!

பது:—இனி நான் தாள மாட்டேன்.— உண்மை தெரியாமல் என்னையா நீர் சந்தேகிக்கிறீர்?

ரகு:—இன்னும் ஒரு வார்த்தை பேசினால் உன் எலும்பெல்லாவற்றையும் முறித்து விடுவேன். (கையை ஓங்குகிறார்).

யோகி:—(அவர் கையைப் பிடித்துத் தடுத்து) ஐயோ! பாவம்! அவனை யொன்றும் செய்ய வேண்டாம். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவுக் காக அவனைச் சும்மா விட்டு விடும். எனக்கு என்ன தீங்கு நேரிட்டாலும் பாதக மில்லை; எனக் காக அவன் சிறிதும் கஷ்ட மடைய வேண்டாம்.

ரகு:—(மகனைப் பார்த்து) நன்றி கெட்ட நாயே! பார்த்தாயா, ஸ்வாமியின் பெருந் தன்மையை? இன்னமும் நீ மனம் வருந்த வில்லையா?

யோகி:—(அவர் முன்னால் முழந் தாளிட்டு) அவனை விட்டு விடும். நான் கை பிரந்து உம்மை வேண்டுகிறேன்.

ரகு:—(கீழே விழுந்து யோகியை நமஸ்கரித்து, அவரைத் தூக்கி நிறுத்தி) இப்படியும் நீர் பரிகாசம் செய்ய லாமா?— (மகனைப் பார்த்து) பார்த்தாயா, பாவி, இவருடைய தயாள குணத்தை?

பது:—அப்புறம்!—

ரகு:—போதும், நிறுத்து.— இந்த மஹா னுடைய யோக்கியதை தெரியாமல், அவருக்கு நீ செய்த அபசாரம் தீர, உடனே உன்னை வீட்டை விட்டுத் துரத்தி, ஒரு நல்ல முகூர்த்தம் பார்த்து, அவருக்கு நம் கமலாவைக் கல்யாணம் செய்து வைக்கிறேன்.

பது:—(கவலையுடன்) அவளைப் பலவந்தப் படுத்தப் போகிறீரா என்ன?

ரகு:—என் வீட்டில் என் னிஷ்டப் படித்தான் நடக்க வேண்டு மென்பதை நீங்கள் எல்லாரும் அறியுங்கள்.— அதிருக் கட்டும்; நீ செய்தது தவறு என்று ஒப்புக் கொண்டு, இந்த ஸ்வாமிக்கு நமஸ்காரம் செய்து, அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறாயா,— அல்லது,— வீட்டை விட்டுப் போகிறாயா?

பது:—நானா?— இந்த மோச வேஷதாரியையா?

ரகு:—ஆஹா! ஆஹா! (கோபத்துடன்) என்ன சொன்னாய் ஸ்வாமியை?— (கையை ஓங்கி அவனை அடிக்கப் போகும் போது, யோகியார் தடுப்பது போல் பாவனை செய்ய, யோகி யைப் பார்த்து) விடும் என்னை.— (திமிறிக்கொண்டு மகனைப் பார்த்து) என் வீட்டை விட்டுப் போ; இனி இங்கு வாராதே. (கையை ஓங்குகிறார்).

பது:—(சற்று இடது புறம் நகர்ந்து நின்று) நான் போகிறேன்.— ஆனால், நான் வெளிச் சென்றதும், உமக் குண்டாகக் கூடும் கெடுதலை உமக்குச் சொல்லி விட்டுப் போகிறேன். இந்தக் கபட யோகி ஒரு சண்டாளன். அவன் உமது மனைவியைச் சொந்த மாக்கவும், என் தங்கையின் கற்பை அழிக்கவும், துணிவான். இவற்றை அகற்றி, இவன் ஒரு கொலைபாதகன் என்பதையும் ரூபித்து விடுகிறேன் சீக்கிரம். அப் பொழு தாவது, உமக்குப் புத்தி வரும்.

ரகு:—அபசாரம்! அபசாரம்! இந்த மஹாராணியா நீ இப்படிப் பேசுவது?— சீ! போ! உடனே.— இங்கு ஒரு நிமிஷம் நின்றாலும் உன்னைக் கொன்று விடுவேன்.— (அவன் கழுத்தில் கையை வைத்து) ஒழி.— (இடது புறம் தள்ளி விடுகிறார்.)

யோகி:—(வலது புறம் நகர்ந்து நின்று, தனக்குள்) ஆஹா! என்னென்ன நடக்கின்றது! நான் தப்பித்துக் கொள்ள இந்தச் சிறுவனைத் துயரத்துக் குள்ளாக்கு கின்றேனே!

ரகு:—(வலது புறம் முன் வந்து) ஸ்வாமி! என்ன யோசிக்கின்றீர்?

யோகி:—என் மனம் தத்தளிக் கின்றது. என் வருத்தம் அதிகரிக் கின்றது.— என்னால் என்னென்ன நேரிடுகின்றது!

ரகு:—ஸ்வாமி! தேவரீ ரிப்படி வருந்த லாகாது. எல்லாம் நலத்திற் காகவே ஆகின்ற தென்று நினைக்க வேண்டும். உண்மையை எனக்குத் தெரிவித்து உம் மிடம் என்னுடைய பக்தியை அதிகரிக்கச் செய் தருளிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைச் சென்று வணங்குவோம், வாரும்.

யோகி:—அப்படியே.

ரகு:—(வலது புறம் முன் செல்கிறார்).

யோகி:—(சற்று பின் நின்று, பெரு மூச்சு விட்டு, வருத்தத்துடன்) என்னென்ன நடக்கின்றதோ பார்ப்போம்! எப்படி யிருக் கின்றதோ நமது விதி?— உம்.— (பெரு மூச்சு விட்டு, சற்று நின்று, ஒரு தீர்மானத்துக்கு வந்தது போல் தலையை அசைத்து, பிறகு, வேகமாக, வலது புறம் போகிறார்.)

அங்கம் 2.

காட்சி 3.

[ஒரு தெரு—. முன் காட்சிக்கு அடுத்த சனிக் கிழமை காலை 8 மணி.— இடது புறத்தி லிருந்து, உஞ்ச விருத்தி எடுப்பதற் குரிய உடை உடுத்திய யோகிகள், இடது தோளி லிருந்து ஒரு செம்பு தொங்கவும், வலது தோளில் தொங்கிய தம்புருவை வலது கையாலே மீட்டிக்கொண்டும், இடது கையில் சப்பளாக் கட்டை வைத்து அடித்துக் கொண்டும்,

S. ஒரு பஜனைப் பாட்டு பாடிக் கொண்டும் வர, அவர் பின்னால் ரகுநாதய்யங்கார், கோவிந்தாசாரியார் ஸ்வாமிகள், சிவராம கனபாடிகள், கல்யாணராம சாஸ்திரிகள், ராம கிருஷ்ண தாஸரி, மனத்துணை நாயக்கர், இன்னும் சிலர், தாளமும் கைத் தாளமும் போட்டுக் கொண்டு வர, எல் லோருமாய் பஜனை செய்து கொண்டு வருகிறார்கள். வீதியின் வீடுகளி லுள்ளவர்களும் தெருவில் போகிறவர்களும் யோகி கள் தோளில் தொங்கும் செம்பில் நாணயங்களும், தாஸரி தோளில் தொங்கும் துணிப் பையில் அரிசியும் போடுகிறார் கள். பஜனைக் கூட்டத்தார் வலது புறம் வந்து கொண்டே யிருக்கையில், வலது புறத்தி லிருந்து ஒரு (Police) போலீஸ் (Constable) கான்ஸ்டபில் வந்து கல்யாணராம சாஸ்திரிகளை யணுகி, போலீஸ் (Salute) ஸெல்யூட் செய்து, ஒரு நீண்ட (Brown paper cover) காகித உறையைக் கொடுக்கிறான். சாஸ்திரிகள் அதைப் பிரித்துப் படித்துப் பார்த்து, ஆச்சரிய மும் கோபமும் வருத்தமும் கலந்த முகத்துடன், யோகிகளை நெருங்கி, அவர் காதில் ஏதோ சொல்ல, அவர் பஜனையை நிறுத்துகிறார்.]

கல்:—அடே! 5–0–9! ("Five - nought - nine" ப்வைவ் நாட் நைன்) இவர்கள் மூன்று பேரையும் (arrest) அரெஸ்டு செய். (கோவிந்தாசார் ஸ்வாமி, சிவராம கனபாடிகள், ராமகிருஷ்ண தாஸரி, ஆகிய மூவரையும் காண்பிக்க, கான்ஸ்டபில் அவர்கள் மூவரையும் அரெஸ்டு செய்கிறான். எல்லோரும் திகைத்து நிற்கிறார்கள். தாஸரியின் பக்கத்தி லிருந்த மனத் துணை நாயக்கர் தாஸரி யிட மிருந்த அரிசி மூட்டையை வாங்கிக் கொள்ளுகிறார். எல்லோரும் யோகிகளையும் கல்யாண ராம சாஸ்திரிகளையும் பார்க்கிறார்கள்).

யோகி:—சாஸ்திரிகளே! எதற்காக இவர்கள் கைது செய்யப் படுகிறார்கள்?

கல்:—ஸ்வாமி! நேற்றிரவு இந்த தாஸரி (Railway Refreshment Room) ரெயில்வே ரிப்ப்ரெஷ்மெண்டு ரூமில் குடித்து விட்டுக் கூச்ச லிட்டுச் சண்டை போட்ட தாகவும், அப் பொழுது அங்கிருந்த சிலரையும் (Refreshment Room Manager)

ரிப்வ்ரெஷ்மென்டு ரூம் மேனேஜரையும் வேலைக் காரர்களையும் அடித்த தாகவும், அப் பொழுது தேவடியாள் வீட்டி லிருந்து வந்து கொண் டிருந்த மற் றிருவரும் தாஸரிக் குதவி செய்து சிலரை அடித்த தாகவும், (Sub-Magistrate) சப் மேஜிஸ் டிரேட் டிடம் (Complaint) கம்பிளெயின்டு கொடு பட்டது; ஆகவே, (Warrant) வாரண்டு பிறந் திருக்கிறது.

யோகி:—(காதைப் பொத்திக் கொண்டு) கிருஷ்ணா! கிருஷ்ணா! இ தென்ன அநியாயம்?

கோ:—ஸ்வாமி! நா னென்று மறியேன்; யாரோ நமக்கு வேண்டாத வர்கள் இப்படிச் செய் திருக்க வேண்டும்.

சிவ:—ஸ்வாமி! நான் ஒரு பாவமும் அறியேன். நாம் எல்லோரும் ஸத் காரியம் செய்வதினால், பலருக்கு அசூயை உண்டாகி இப்படி அபாண்ட மான பழியை எங்கள் மீது சுமத்து கிறார்கள்.

தாஸரி:—ஐயோ, ஸ்வாமி! எல்லாம் சுத்தப் பொய். நான் பிராம்ம ணர்க ளுடன் சேர்ந் திருக்கிறேன் என்று எங்கள் சாதியில் சிலருக்கு என் மீது கோபம்; அதனால், இப்படிப் பொய் கேஸைத் தயாரித்து இருக் கிறார்கள்.

யோகி:—சாஸ்திரிகளே! இவர்கள் சொல்கிறபடித் தான் இருக்க வேண்டும்.

கல்:—ஸ்வாமிகளே! எது என்ன இருந்தாலும், இப் பொழுது இவர்கள் (Police Station) போலீஸ் ஸ்டேஷனுக்குப் போக வேண்டியது தான்.

யோகி:—இவர்கள் காவலில் இல்லாம லிருக்கச் செய்ய முடியாதோ?

கல்:—சப் மேஜிஸ் டிரேட் டிடம் போகாமல், கம்பிளெயின்டு எங்க ளிடமே வந் திருந்தால், இதை ஒரு மாதிரியாய் முடித்து விடலாம். அவர் சுத்த முரடு.—இனியும், என்ன செய்ய லாமோ பார்க்கிறேன்.—அடே 5-0-9!—(உடனே கான்ஸ்டபில் அவர் முன் வந்து போலீஸ் ஸெல்யூட் செய்து நிற்கிறான்).—இவர்களை அழைத்துச் செல்.

(கோவிந்தாசாரியார் ஸ்வாமிகள், சிவ ராம கனபாடிகள், ராம கிருஷ்ண தாஸரி, ஆகிய மூவரும் யோகிகள் முன் வந்து நமஸ்கரிக்கிறார்கள்).

யோகி:—(கை உயர்த்தி ஆசீர்வாதம் செய்து) ஸ்ரீ கிருஷ்ண பகவா னுடைய அருள் உங்களுக்குப் பூரணமாக உண் டாகட்டும்! நீங்கள் மனம் வருந்த வேண்டாம். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவி னுடைய பக்தர்களுக்கு ஒரு நாளும் கெடுதல் வராது. "நமே பக்தா : ப்ரணச்யதி," என்ற அவ ருடைய வாக்குத் தத்தத்தை மனதில் வைத்து, தைரியமா யிருங்கள். அவ ரவ ருடைய கர்மம் தீரு வதற்கு என் னென்ன நேர வேண்டுமோ அவைகள் நேர்ந்தே தீரும். பக்த கோடிகள் பகவானைச் சீக்கிரம் அடைய வேண்டு மென்று ஆதுரத் துட னிருந்தால், அவ் வித துரித பிரயத்னர்களுக்கு அள வில்லாத துன்பங்களும், எண்ணவுங் கூடாத கஷ்டங்களும், அபாண்டமான பழிகளும், சகிக்க வொண்ணாத ஹிம்சை களும், பொறுக்க முடியாத வியாதிகளும், இன்னும் பல வித இன்னல்களும், சிறை வாசம் முதலிய உபத்திரவங் களும் ஏற்படு மென்பது பக்தர்க ளுடைய சரிதங்களால் விளங்குகின்றது. அவ் விதம் உண்டாவது அவர்கள் கர்ம பந்தங்கள் தீரும் காலம் நெருங்குகிற தென்பதைக் காட்டு கின்றது. ஆகையால், நீங்கள் மனத் தளராமல், சந்தோஷத் துடன், ஸ்ரீ கிருஷ்ண பகவானை மனதில் தியானித்துக் கொண்டே, செல்லுங்கள். உங்களுக்கு ஒரு குறைவும் வராது. (மூவரும் வணங்குகிறார்கள்). ராதா கிருஷ்ணகி ஜே!—

(எல்லோரும் "ராதா கிருஷ்ணகி ஜே!" என்று கத்து கிறார்கள். மூவரும் கான்ஸ்டபிளும் வலது புறம் போகிறார் கள்).—

பக்தர்காள்! எல்லாம் கண்ண னுடைய திரு வுள்ளம்! ஆகையால் கவலைப் படாது பஜனையைத் துடங்குங்கள்.

S. (யோகிகள் இன்னொரு பாட்டைச் சொல்லி பஜனை யாரம்பிக்க, எல்லோரும், பஜனை செய்து கொண்டே, வலது புறம் போகிறார்கள்).

அங்கம் 3.

காட்சி 1.

(கோதை யம்மாள் படுக்கை யறை.—முன் காட்சி யன்று பகல் 2 மணி.—கோதை யம்மாள் தன் னுடைய கட்டிலில் படுத்துத் தூங்கிக் கொண் டிருக்கிறாள். இடது புறம் வெளியில் (Motor Horn) மோடார் ஹார்ன் ஓசை கேட்கிறது. சற்றுப் பொறுத்து, பதுமனுபன் இடது புறம் வருகிறான்).

பது:—(கோதை யம்மாள் தூங்கிக் கொண் டிருப்பதைக் கண்டு, சற்று தயங்கி நின்று) நான் என்ன செய்வது? நாம் இவளுடன் பேசி எப்படி யாவது என் னுடைய எண்ணம் போல் கமலத்தின் விவாகத்தை முடித்து வைக்க வேண்டு மென்று வந்தால், இவள் தூங்கு கின்றாளே?—என் னுடைய தகப்பனார் இல்லாத காலத்தில் நான் திருடன் மாதிரி யாக என் னுடைய வீட்டிற்கே ஒளிந்து மறைந்து வர வேண்டி யிருக்கிறதே!—(மறுபடியும் கோதையைப் பார்த்து, பெரு மூச்சு விட்டு) இன்னும் உறங்குகிறாள். தனிமையாய் இவளை மறுபடியும் பார்த்துப் பேசுவதற்கு எப் பொழுது சமயம் வாய்க்குமோ? இந்த யோகி வீட்டி லிருக்கு மளவும் ஏதாவது அபாயம் நேரிடுமோ வென்று ஒரே கவலையா யிருக்கிறது.— (பெரு மூச்சு விட்டு) அன்று நாம் கண்ணாரக் கண்டும் இன்னும் பொறுத் திருக்க வேண்டி யிருக்கின்றதே! எனது மாற்றாந் தாய் என்பதால் நான் வீண் பழி கூறுகிறே னென்று என் தகப்பனார் எண்ணி விட்டாரே!— எந்தக் காரணத்தினாலோ என் சிற்றன்னையும் நடந்த வரலாற்றை உள்ள படியே கூறாது சும்மா இருந்து விட்டாள்.—அவளுக்கு என் னிடத்தில் உண்மையாக அன்பு இருக்கிற தென் பதற்குத் தடை யில்லை. என்னை வீட்டை விட்டு என் தகப்பனார் அனுப் பினதற்கு அவள் வருந்துகிறாள் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்.— (திரும்பி அவளைப் பார்த்து விட்டு) படுத் துறங்கும் போதும் அவள் முகத்தில் வருத்தமும் மனக் கலக்கமும் விளங்குகின்றன. கவலையினால் அயர்ந்தே

ஓய்ந்து படுத் திருக்கிறு ளென்று நினைக்கிறேன்.—எப் பொழுது தான் இந்தத் தொல்லை தீருமோ? எப் பொழுது தான் உண்மை வெளியாகுமோ! இதற்கு என்ன செய்வது?—கடவுளை நம்பினோர் கை விடப் படார் என்னும் முது மொழி ஒரு நாளும் தவ ருகாது. நான் மன மாற எக் காலும் தியானித்து வரும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் திருப் பாதங்களே எனக்குத் தஞ்ச மென நம்பி யிருந்தும், நான் கவலைப் படுவா னேன்? எல்லாம் அவ ருடைய செய லென அவர் திரு வுள்ளப் படி நடக்கட்டு மென்று விட்டு அவரையே துதித்து வருவேன். (அங் குள்ள ஒரு நாற் காலியை ஓசைப் படாமல் முன் னிழுத்து, அதில் உட் கார்ந்து, கண் மூடி, மன திற் குள்ளேயே தியானிக்கின்றுன்).

கோதை:—(தூக்கத்தி லிருந்து கண் விழித்து, வெருண்ட பார்வை யுடன், பதுமனுபன் உட்கார்ந் திருப்பதைக் கண்டு, ஆச்சரியத் துடன் எழுந்து, மஞ்சத்தி னின்றும் இறங்கி நின்று, கவலை யுடன் அவன் முகத்தைப் பார்த்து, அவன் கண் மூடி தியானத்தி லிருப்பதைக் கண்டு, வலது புறம் சற்று விலகி நின்று, அவனைக் கவலை யுடனும் அன் புடனும் நோக்கி நிற்கும் போது, அவன் கண் திறப் பதைக் கண்டு) பது!

பது:—(திடுக் கிட்டுத் திரும்பி, நாற் காலியி னின்றும் எழுந்து நின்று, கை கூப்பி) அம்மா! தாங்கள் படுக் திருந்ததால் தங்களைத் தொந்தரவு செய்ய லாகா தென்று உட்கார்ந் திருந்தேன். தங்கள் படுக்கை யறையில்—தாங்கள் உறங்கும் போது—நான் வந்ததற்கு மன்னிக்க வேண்டும்.

கோதை:—அதனு லென்ன? நீ வந்ததே மிகவும் சந்தோஷம்.

பது:—தாயே!—இப்படி நாற் காலியில் உட்காருங்கள்.

கோதை:—நீயும் உட்கார். (பதுமனுபன் இன் னொரு நாற் காலியை எடுத்துப் போட, அதில் கோதை யம்மாள் உட்கார, தானும் தன் நாற்காலியில் உட்காருகிறுன்).

பது:—அன்னையே! என் மனதி லிருக்கும் கவலையையும் வருத் தத்தையும் தங்க ளிடம் கூற நான் வந்தேன்.

கோதை:—எனக்கு அது தெரியாதா?

பது:—ஆம், அம்மா! தங்களுக்குத் தெரியாத தல்ல; ஆயினும், நாம் என்ன செய்வ தென்று யோசிப்பதற்கே தங்களிடம் வந்தேன். இந்த துரோகியும் போகியு மான யோகியை உடனே வீட்டை விட்டு அகற்றி, என் தங்கையை அனந் தய்யங்காருக்குச் சீக்கிரம் மணம் புரிவிக்கா விட்டால், தங்களுக்கும் கமலாவிற்கும் என் னென்ன இன்னல்கள் நேரிடுமோ வென்று கலங்குகிறேன்.

கோதை:—பது! ஒரு கெடுதலும் வாராது.

பது:—அம்மா! தங்களுக்குத் தெரியாத தல்ல.—என் தகப்பனார் இந்தப் போலி யோகியை அதிக மாக நம்பி யிருக்கின்றார்.—

கோதை:—அதை மாற்றுவதும் கஷ்டம்!—

பது:—நாம் என்ன சொன்னாலும் அவர் நம்ப மாட்டார்.—

கோதை:—ஆமாம்.—

பது:—அன்று, என் விஷயத்தில் நடந்ததைத் தாங்கள் அறிவீர்க ளல்லவா?

கோதை:—ஆமாம்:—பாவ மொரு புறம், பழி யொரு புறம் என்ற படியே ஆயிற்று.

பது:—இப் படியே எவ் வளவு காலம் நடக்க விடுவது? சும்மா யிருந்தால், இன் னும் என் னென்ன நேருமோ?

கோதை:—நீ என்ன செய்தாலும் எனக்குச் சம்மதந்தான்.

பது:—(சற்று யோசித்து, சிறிது தயக்கத்துடன்) எனக்கு—ஒரு மார்க்கம்—தோன்றுகிறது. அதற்கு—தாங்கள் சம்மதித் தால்—காரியம் கை கூடும்.

கோதை:—அது என்னவோ?

பது:—எனக்கு— சொல்வதற்கும்— வாய் கூசுகின்றது.—(சற்று யோசித்து, தனக்குள்) வேறு வழி யில்லை.—(உரக்க) தாயே! அன்று, நமது தோட்டத்தில், இந்த யோகி செய்ய யத்தனித்ததை எனது தந்தையே நேரில் பார்க்கும் படி யாகச் செய்தால் தான் அவ ருடைய அபிப்பிராயத்தை மாற்ற லாம்.

கோதை:—(கவலை யுடன்) அதற்காக என்ன செய்யப் போகின்றாய்?—என்னை ஏதாவது ஆபத்திற்கு உள்ளாக்கி விட்டு விடாதே.

பது:—அன்னையே! கவலைப் பட வேண்டாம். நான் உள்ள வளவும்—சீ! அற்பனை "நான்"—நான் நம்பி யுள்ள ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் திருப் பாதங்களின் சக்தி யுள்ள வளவும்—ஒரு கெடுதியும் வராது.—தாயே! அவ் விதம் ஏதாவது கெடுதல் சிறிதேனும் உண்டாகக் கூடியதா யிருந்தால், நான் தைரிய மாகச் சொல்வேனா?

கோதை:—பது! உன்னை நம்பாம லில்லை; ஆயினும், அச்சத்தினால் அவ் விதம் கேட்டேன்.—சரி, என்ன? சொல்.

பது:—அம்மா! அந்த யோகி இங்கு வரும்படிச் செய்கிறேன்.—

கோதை:—எதற்கு?

பது:—தாயே! சற்றுப் பொறுங்கள்; நான் சொல்வதைக் கேளுங்கள்.—தாங்கள் ஏதோ பக்தி விஷயமாய்ப் பேசுவதற்கு கூப்பிட்டதாகத் தெரிவித்து அவரை இங்கு வரும்படிச் செய்கிறேன்.

கோதை:—உம்—

பது:—அவர் எப்படி யாவது தன் னுடைய பழைய கதையை ஆரம்பிப்பார்.—தாங்கள் தனித் திருப்பதை உத்தேசித்து முன் மாதிரியே சொல்லவும் செய்யவும் யத்தனிப்பார். அதற் குள்ளாக, இவ் விடத்திற்கு என் தந்தை வரும்படி நான் ஏற்பாடு செய்கிறேன்.

கோதை:—நீ?

பது:—நான் என் னுடைய ஒரு நண்பனின் மோடார் காரில் வந்திருக்கிறேன். ஆகையால், நானும், வேகமாய்ப் போய், வேண்டிய மனுஷ்யர்க ளுடன், உடனே வந்து சேருகிறேன்.

கோதை:—சரி.—ஏதாவது—

பது:—அன்னையே! ஒன்றும் கவலைப் பட வேண்டாம்.—(இடது புறம், யோகியின் குரலைக் கேட்டு, எழுந்து) அதோ அவர்

குரல் கேட்கிறது.—சரி,— நான் சீக்கிரம் வருகிறேன்;— பயப் பட வேண்டாம். (இடது புறம் வேக மாய்ப் போகிறான்.)

(போகும் பதுமனுபனைப் பார்த்த வண்ணம், கோதை எழுந்து நின்று, கவலை யுடனும் வருத்தத் துடனும் சற்று அசைவற் றிருந்து, பெரு மூச்சு விட்டு, திரும்பி, நாற்காலிகளை எடுத்து அவைகளின் இடங்களில் போடு கிறாள்.— இடது புறம் வெளியில், மோடார் ஹார்ன் ஓசை கேட்கிறது.— பிறகு, தனது மஞ்சத்தின் மீது, யோசனையி லாழ்ந்த வண்ணம், உட்காருகிறாள்.)

கோதை:—பதுமனுபன், சிறியவனா யிருந்தும், தீர்க்க ஆலோசனை யுள்ளவன் தான்.—ஆயினும், நான் தனித் திருக்கும் போது இந்த யோகி வந்து, என் கணவர் வரும் முன், சற்று வரம்பு கடந்து நடந்தால் என்ன செய்வது?— முன்பு துரௌபதியின் மானத்தைக் காத்து உதவி யருளிய கண்ண பிரானின் கருணை யிருந்தால் ஒரு கெடுதியும்

S நேரிடாது. (ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியைக் குறித்துத் தியானித்துப் பாடுகிறாள்.)

(யோகி இடது புறம் வருகிறார்.)

யோகி:—(மெல்ல கோதை யம்மாள் தியானித்துப் பாடுவதைக் கேட்ட வண்ணம் ஒரு புற மாகவே நின்று, அவள் பாட்டு முடியும் பொழுது முன் வந்து, புன் சிரிப் புடன்) அம்மணீ! —(கோதை திடுக் கிட்டு எழுந் திருக்கிறாள்.)— ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியை நீ வேண்டிய வுடன், அவருடைய தாஸனான அடியேனை அவர் இங்கு அனுப்பி யுள்ளார்.—

கோதை:—வாருங்கள்; அந்த ஆஸனத்தில் உட்காருங்கள். (யோகி இடது புற முள்ள ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளுகிறார்).

யோகி:—பெண்மணீ! நான் வரும் பொழுது நீ ஏதோ மன வருத்தத் துடன் என் னுடைய கண்ண பிரானை மிகவும் இனிமை யாகவும் மன முருகியும் ஸ்தோத்திரம் செய்து கொண் டிருந்தாயே. உன் னுடைய குறை என்ன வென்று அவ ருடைய தாஸனான அடியே னிடம் கூற லாமோ?

கோதை:—ஸ்வாமி! என் போன்ற ஸ்திரீகளுக்கு வேறு என்ன குறை இருக்கப் போகின்றது?—எங்கள் கணவர் எங்களிடம் ப்ரீதியாயும் அந்யோன்யமாயும் இருக்க வேண்டுமென்றும், எங்களுக்குக் குழந்தைகள் பிறக்க வேண்டுமென்றுந் தான் நாங்கள் எப்பொழுதும் கவலைப் படுவது.

யோகி:—அம்மணீ! உன்னுடைய பர்த்தா உன்னிடம் வெகு ப்ரீதியாயிருக்கின்றாரென்பதை நான் சொல்லவும் வேண்டுமோ?—நீங்களிருவரும் பக்தியுடன் வழிபடும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் கிருபையால் உங்களுக்குச் சீக்கிரம் மக்கட் பேறு உண்டாகும்.

கோதை:—(கை கூப்பி) கண்ண பிரானின் கருணைக்குக் குறை கிடையாது தான்.—ஆயினும்,—

யோகி:—"ஆயினும்", என்ன?

கோதை:—(தலை குனிந்து) என் கணவர்—வயோதிக—ராயிற்றே—என்று தான் கவலை.

யோகி:—யோகத்தின் மஹிமையால் உன் கவலையைத் தீர்ப்பேன்.

கோதை:—தாங்கள் சொல்வது எனக்குப் புலப்படவில்லையே.

யோகி:—பெண்மணீ! உன்னுடைய கணவர் என்னை இங்கு வரவழைக்க, நான் உன்னைக் கண்ட நாள் முதல், எனக்கு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவினிடத்திலிருக்கும் பக்திக்கு அடுத்தபடி உன்னிடத்தில் ஒரு விசேஷ ப்ரேமை உண்டாயிற்று.—

கோதை:—யோகிகள் எல்லோரையும் சமமாகப் பார்க்க வேண்டியிருக்க, அடியாளிடம் தங்களுக்கு ஒரு விசேஷ அன்பு இருக்கலாமோ?

யோகி:—அப்படியல்ல; எல்லாரிடத்திலும் அன்பு இருக்க வேண்டியது தான்; ஆயினும், பகவானிடத்தில் விசேஷமாக பக்தியைச் செலுத்துவது போல், பந்துக்களிடத்திலும் பக்தர்களிடத்திலும் விசேஷமான ப்ரீதியைச் செலுத்துவதில் தவறில்லை. அவ்விதமே பௌத்தர் ஆனந்தனிடத்திலும், ராமாநுஜர் கோவிந்தனிடத்திலும், இன்னும் எல்லா பெரியோர்களும் தங்கள் பிரிய சிஷ்யர்கள்

இடத்திலும், அன்பை விசேஷமாகச் செலுத்தி யிருக்கிருர்கள். பௌத்தர் தன் மனைவி யிடத்தும் அளவற்ற அன்பைக் காட்டிய தாகக் கூறப்பட் டிருக்கிறது. ஆகையால், பெண்மணி! உன் னிடத்தில் எனக்கு உண்டா யிருக்கும் ஆசைக்கு அளவில்லை.

கோதை:—(தலை குனிந்து, முகம் சுளித்து, ஒரு புறம் ஒதுங்கி நிற்கிருள்).

யோகி:—(எழுந்திருந்து, கோதை யிருக்கு மிடம் ஓரடி எடுத்து வைத்து) உன் னுடைய இளம் பருவம் வீணுகக் கழிவா னேன்? பெண் மணி! என் கோரிக்கையைத் தீர்த்து, உன் குறையையும் நீக்கிக் கொள் வாய்.—

கோதை:—(இடது புறம், வெளியில், மோடார் ஹார்ன் ஓசை கேட்டு, முக மலர்ச்சி யுடன் தலை நிமிர்ந்து, இடது புறம் பார்த்து விட்டுத் திரும்பி, யோகியைப் பார்த்து, கோபத் துடன்) ஸ்வாமி! இ தென்ன இவ் விதம் பேசுகிறீர்கள்? அடியாளைப் பரீக்ஷித்துப் பார்க்கிறீர்களா என்ன? முன்பு ஒரு தரம், இவ் விதமே தாங்கள் நடந்து கொண்ட பொழுது, வீணுகப் பதுமனுபன் மீது அபவாதம் உண்டாக்கினீர்கள்.

யோகி:—பெண்மணி! அவ் விஷயத்தில் என்னை மன்னிக்க வேண்டும். நான் என்ன செய்வது? உண்மையை நாம் இருவரும் கூற முடியவில்லையே. அதி லிருந்தே உனக்கும் சிறிது சம்மத மென் றறிந்து கொண்டேன்.—கண்மணி! இனி வீணுகக் காலத்தைக் கழிக்க வேண்டாம். இன்று மாதிரி தருணம் மறுபடியும் என்று வாய்க்குமோ? (அவளை நெருங்கி) காதலீ! கருணை புரிந்து என் னுடைய கோரிக் கையைத் தீர்ப்பாய். (தன் னுடைய இரு கரங்களையும் நீட்டுகிருர்).

கோதை:—ஐயோ!—சற்று தூரத்தில் நில்லும்; நெருங்கினுல், சத்தம் போடுவேன்—(இடது புறம் நோக்கி, ரகுநாதய் யங்கார் எட்டிப் பார்ப்பதைக் கண்டு, தைரியத் துடன்) மரியாதையாக வெளியில் போய்விடும். இல்லாவிட்டால் என்னுடைய கணவரிடம் சொல்லி விடுவேன்.

யோகி:—(நகைத்து) பெண்மணி! உன் கிழவர் கோர்ட்டி லிருக்கிறுரே!— வீணுக மறுக்காதே; உன் னுடைய யௌவனத்தையும் என் னுடைய காதலேயும் அழிக்காதே. (நெருங்குகிறுர்).

கோதை:—ஐயோ! (வலது புறம் வேகமாக ஓடுகிறுள்.)

(ரகுநாதய்யங்கார் இடது புறம், வேகமாயும், வெகு கோபத்துடனும், வருகிருர்).

ரகு:—அடே பாவி! துரோகி!—

யோகி:—(திடுக் கிட்டுத் திரும்பி, ரகுநாதய்யங்காரைக் கண்டு, வெட்கித் தலே குனிந்து நிற்கிருர்).

கோதை:—(முன் வந்து) வாருங்கள், நல்ல சமயத்தில் வந்தீர்கள். இல்லாவிட்டால், என் கதி என்னவா யிருக்கும்? (அழுகிறுள்).

ரகு:—நீ ஆபத் தான ஸ்திதியில் இருக்கிறு யென்று எனக்கு (telephone) டெலிப்வோன் வந்தது; உடனே (car) காரில் வேகமாய் வந்தேன்.

கோதை:—இதை விட ஆபத்து எனக்கு வேறு என்ன இருக்கிறது?

ரகு:—(யோகியைப் பார்த்து) வேதாந்த மெல்லாம் பேசியது இதற்குத் தானு? பசுவின் தோலேப் போர்த்து புலி வந்தது போல், நீயும் ஒரு பக்தனேப் போல் வெளி வேஷம் போட் டாயே? நான் உன்னே நம்பியதற்குப் பலன் இதுதானு? நான் உன்னேப் பூஜித்து வந்ததற்குப் பிரதியா இது? அடே பாவி! சண்டாளா! அயோக்கியா! அதமா! சீ! என் வீட்டை விட்டு வெளியில் போ.— (பெரு மூச்சு விட்டு நிற்கிருர். மோடார் ஹார்ன் ஓசை வெளியில் தூரத்தில் கேட்கிறது.)— ஆஹா! என்னே எவ்வளவு ஏமாற்றினுய்?—

யோகி:—(பரிஹாஸச் சிரிப்புடன்) நானு ஏமாற்றினேன்?— (மோடார் ஹார்ன் ஓசை இடது புறத்தில் நெருங்கிக் கேட்கிறது).— இவ் வுலகில் இப்படித் தான் பாவ மொரு புறமும் பழி ஒரு புறமுமாக இருக்கின்றது. மேலும், ஸ்திரீகளின் சுவபாவமே எப் பொழுதும் உள்ளதை

மறைத்து மேலுக்கு யோக்கியர்கள் போல் காண்பிப்பது.— சற்று முன்பு உமது மனைவி என்னை இங்கு வரும்படிச் சொல்லி யனுப்பிய தால் தான் நான் இங்கு வந்தேன்.—

கோதை:—ஐயோ! படுபாவி!

ரகு:—துராத்மா! செய்ததையும் செய்து விட்டு, வீண் அபவாதம் கூறுதே.

(இடது புறம் பதுமனுபனும் துரைராஜ அய்யரும் அனந்த அய்யங்காரும் வருகிறார்கள்).

யோகி:—வீணாக ஏன் பிதற்றுகிறீர். படுக்கை யறையி லிருந்து கொண்டு இவள் என்னை இங்கு வரச் சொல்லி அனுப்பினாளா இல்லையா வென்று அவளைக் கேளும்.

பது:—துஷ்டா! வஞ்சகா! அயோக்யா! கொலைக்கும் அஞ்சாத சண்டாளா? நீயா பொய் கூறக் கூசுவாய்? உன்னை இனி யார் நம்புவார்கள்? முன்பு, ஒரு தரம், என் மீது பொய் பழி கூறினாய். இப் பொழுது, உண்மை தெரிந்த என் முன்பும், என் தந்தை முன்பும், என் தாய் மீது வீண் பழி கூறப் பார்க்கிறாயா?

ரகு:—அப் பொழுது, நான் உண்மையை அறியாமல் கண் மூடி யிருந்தேன். அதனால், இந்தக் கபட வஞ்சக னுடைய வார்த்தையை நம்பி, என் மைந்தனையும் வீட்டை விட்டுத் துரத்தினேன்.—ஐயோ! என் னென்ன ஆபத்துகள் நேரிட்டன என் னுடைய மூட நம்பிக்கையால்! பகவத் பக்தியிலும் பஜனையிலும் உண்மையான பக்தர்க ளிடத் திலும் அன்பும் நம்பிக்கையும் உள்ள என் போன்ற எல்லோரையும் ஏமாற்ற இந்த பக்த வேஷம் பூணுகின்றனரே இவனைப் போன்ற கசடர்களும் காமுகர்களும்!

துரை:—கொலை பாதகர்களும்.—

ரகு:— துரை ராஜ அய்யர்! தங்களை இது வரையில் கவனிக்க வில்லை.—ஏது தாங்கள் இங்கு வந்தது?

துரை.—இந்த யோகியாருக்குத் தாங்கள் கல்லியாணம் செய்து வைப்பதாகக் கேள்விப் பட்டேன். மணம் செய்து கொள்வது ஒரு விலங்கு என்று யோகியாருடைய அபிப் பிராயம் என்றறிந்து, மண விலங்குக்குப் பதிலாய், அவருக்கு வேறு விலங்கு இட வந்தேன்—(இடது புறம் திரும்பி, உரக்க) எய்! 3—0—2! (three - nought-two: த்ரீ நாட் டு) (ஒரு கான்ஸ்டபில் இடது புறம் வந்து, ஸெல்யூட் செய்து நிற்கிறான்).—இந்த யோகியாருக்குக் கங்கணம் இடு. (கான்ஸ்டபில் யோகியார் கைகளில் விலங்கு போடுகிறான்.)

யோகி:—(கோபத்துடன் சீறி) இது என்ன அநியாயம்! இது எல்லாம் இந்தப் பயல் பதுமனுடைய வேலை.—

துரை:—(தன்னுடைய பாகெட்டி லிருந்து ஒரு படத்தை யெடுத்து, சற்று தூரத்தில் உயர்த்திக் காட்டி) யோகியாரே! பார்த்தீர்களா தங்களுடைய படம்! பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்ற பழமொழி எக்காலும் பொய்க்காது. தாங்கள் கொலை செய்ததும், தப்பி போடிய தும், ஞாபகம் வருகிறதா?—கொலை பாதகா! (கைச் சவுக்கால் அடிக்கிறார்.)

யோகி:—பொய், பொய், கிருஷ்ணா!

ரகு:—இது என்ன ஒன்றும் எனக்குப் புரிய வில்லையே?

அன:—நான் பின்பு எல்லாம் சொல்லு கிறேன்.

கோதை:—இந்தப் பாவியையா நாம் இவ் வளவு காலம் பூஜித்து வந்தோம்?

பது:—இனி மேல் தான் அவருக்குத் தகுந்த பூஜை கிடைக்கும். இவனைச் செருப்பாலும் தடியாலும் ஆராதனை செய்யப் போகிறேன்.

துரை:—எய்! 3—0—2!—இவனை ஸ்டேஷனுக்கு அழைத்துப் போய் (lock-up) லாக்கப்பில் போடு; நான் வந்த பிறகு, மேல் நடத்த வேண்டிய மரியாதைகளைச் செய்யலாம். (கான்ஸ் டபில் யோகியின் கையைப் பிடிக்கிறான்).

யோகி:—இதெல்லாம் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய லீலை! அவருடைய மாயா விசித்திரங்கள்! அவருடைய திருவுள்ளம் எப்படி யிருக்குமோ! அவருடைய பக்தர்களுக்குக் கெடுதி செய்பவர்களை அவர் தண்டித்து பக்தர்களைக் காப்பாற்றுவார்!

பது:—அயோக்யர்கள் எப்பொழுதும் இப்படித்தான் பகவானுடைய பெயரை இழுப்பார்கள். இவ் வித அயோக்ய (Humbug) ஹம்பக் ஆசாமிகள் இருப்பதால், நல்ல பக்தர்களுக்கும் பக்திக்கும் பகவத் பஜனைக்குமே கெட்ட பெயர் ஏற்பட்டு விடுகிறது.

துரை:—(கான்ஸ்டபிளுக்குக் கண் ஜாடை காட்ட, அவன், யோகியின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு, இடது புறம் போகிறான்).

கோதை:—(எல்லோரும் சப்த மின்றி கொஞ்ச நேரம் இருந்த பிறகு, ரகுநாதய்யங்காரைப் பார்த்து) பதுவின் மீது இனி யாவது தாங்கள் கோபித் திருக்க லாகாது.

ரகு:--பது! முன்பு நான் அறியாமல் உன் மீது கோபித்தது தவறுதான்.

அன:--அவ னுடைய உதவி யில்லா திருந்தால், இன்று தங்களுக்கு இந்த விஷயம் தெரிந் திருக்க முடியாது.

(இடது புறம் கமலம் வேகமாக வருகிறாள்).

கமலம்:—(ஆச்சரியத்துடன்) என்ன சமாசாரம்? யோகியை ஒரு சேவகன் விலங் கிட்டு அழைத்துப் போகிறானே?

பது:—அவருக்கு—கல்லியாணம் ஆய் விட்டது.

ரகு:—இந்த வார்த்தை எனக்கு ஞாபக மூட்டு கின்றது.—கமலா! நான் உன்னை இந்த யோகிக்கு மணஞ் செய்விக்க எண்ணினேன். இப் பொழுது தான் உண்மை யெல்லாம் வெளியாயிற்று. நீ கோரியபடியே உன்னை அனந்த அய்யங்காருக்கு மணம் செய்விக்கிறேன்.— (அவர்கள் இருவர் கைகளையும் சேர்த்து வைக்கிறார்).

அண:—பத்மநாபனும் துரைராஜ அய்யரும் உதவியதனால் தான் எல்லாம் இனிதாக முடிந்தது.

துரை:—நான் செய்தது எனது கடமையைத்தானே?

பத:—நாங்கள் செய்த தாவது? எல்லாம் நம்மைக் காத்திடும் கண்ணன் செயல்!—நம்மை ரக்ஷித் தருளினதற் காக நாம் எல்லோரும் சேர்ந்து அவரை வணங்குவோம்.

எல்லோரும்:—(கை கூப்பி, ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியைக் குறித்து
S. ஸ்தோத்தரித்துப் பாடுகிறார்கள்).

மங்களம்!

M.R.L.

- 0,2:1 l6

[பாரதி பிரஸ், மன்னார்குடி.]